# தென்மொழி

சுவடி : 45
ஓலை : 05

தி.பி.2044 விடை (மே 2013) விலை : உரு - 10.00



தகுந்த கல்வியும், தரமான கல்வியும் !

எப்படிச் சிங்களர் பெரும்பான்மை ஆயினர் ?

தமிழ் எழுத்தின் தொடர்ச்சி

'திராவிடம்' என்பதே தீது

இந்தியாவில் அழிக்கப்பட்டுவரும் தமிழினம்!

வேத வெறி இந்தியா

நூல்நிறை





**உயர் பரணர் !**
**பறம்(பு) அறிவர் !**
**ஓ...ஐயோ. அந்தோ !...!**

ஓங்கலுயர் பரணிருந்த ஒண்டமிழ் – நந் தமிழர் –
ஒப்பில்வளச் சால்புநிலம் – தந்நிலையில் தாழ்ச்சி
நீங்கிஎழ மீண்டுயர நெடுங்கொள்கை தாங்கி
நிலைத்தொண்டில் தோய்ந்திருந்து நீள்கனவில் வாழ்ந்து
பாங்கெல்லாந் தமிழ்மையெனப் பரும்பெரிய வாழ்க்கைப்
பாடமைந்த **பரணர்** – அரும் பேர்**(அ)றிவன்** தோன்றல்
தாங்கரிய துயர்கணக்க அடுத்தடுத்து(எ)ம் நீங்கித்
தமிழுயிர்ப்பே திணறல்கொள மறைகொண்டார், அந்தோ !...

தூயநறும் பண்பு(ஈ)கம் தொண்டுறைவுச் சான்றோர்
தொடர் தொடராய் மாய்கை... உயிர் நலுக்கி நமைக் குலுக்கும் ! ....

– அருவி

## தூயதமிழ் இலக்கியத் திங்களிதழ்

Vol. :45 No.:05 MAY 2013 Price :Rs.10.00



## சாதிப் புழுக்கள் நெளிந்திடும்
## சாணித் திரளைகள் நாம் !

செந்தமிழ்த் தாய்பெற்ற பிள்ளைகள் நாம்;ஒரு
சேரப் பழுத்த பழக்குலை! – இதில்
எந்தப் பழத்தை உயர்வென்று சொல்வது?
எதனை இழிவெனக் கொள்வது?
முந்தப் பெறும்பல பேரினங்கள் இந்த
முதுமை நிலத்தினில் வாழ்க்கையில் – நாம்
கொந்திப் பிடுங்கிடும் தாழ்ச்சி யுயர்ச்சியால்
குலங்குல மாய்மனங் காய்வதோ?

'சாதி'ப் புழுக்கள் நெளிந்திடு மோர்மொத்தைச்
சாணித் திரளையாய் வாழ்க்கையில் – நாம்
ஓதி யுணர்ந்திட்ட மக்களைப் போல்;உல
கோருக் குரைக்கத் துடிக்கிறோம்!
காதுயிர்ப் பற்றசெ விடர்களாய், இரு
கண்களி லாத குருடராய் – நில
வீதி யுலாவரப் பார்த்திடு வோம்! என்ன
வேட்கையில் இங்ஙனம் செய்குவோம்?

முன்னம் பிறந்தவர் என்பதனால் உயர்
மூதுரை சொல்லத் துடிக்கிறோம் – எனில்
சின்னஞ் சிறியராய் வாழ்ந்திடு வோம்;மனச்
சிறுமையி னால்புழு வாகிறோம்!
இன்னும் நினைக்க மறுத்திடு வோம்;உல
கேசும் படிபல பேசுவோம்! – நறுங்
கன்னல் மொழித்தமிழ்த் தாயினமே, சாதிக்
காற்றில் கரைந்துயிர் சாய்வதோ?

– பாவலரேறு –1974



“கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;” எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

*(நிறுவனம் தி.பி.1990 (1959)*

*நிறுவனர்:* **பாவலரேறு பெருஞ்சித்திரனார்**



தென்மொழி

மொழி - இனம் - நாடு

**நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும்வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது; மதப்பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலைதான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

**சுவடி: 45 | தி.பி. உ௦சச விடை (மே 2013) | ஓலை : 5**

# தகுந்த கல்வியும், தரமான கல்வியும் !

தனிமாந்த முன்னேற்றம் முதல் நாட்டு முன்னேற்றம் வரை கல்வியே அடிப்படை. ஆங்கிலன் ஆட்சியில் ஏற்படுத்தப்பட்ட கல்விமுறை இந்நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக அமைக்கப் பட்டதன்று. அவர்களுடைய பணிகளைச் செய்ய இந்நாட்டு மக்களைப் பயன்படுத்திக் கொள்ளுமாறான பணியாட்களுக்குரிய பயிற்சிக்கான கல்விமுறைதான் என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது.

அறிவியல் காலத்தில் அனைத்து மக்களுக்கும் கல்விக்கான வாய்ப்பு ஏற்படுத்தித் தரவேண்டும் என்பது ஒரு நாட்டின் கடமையாகும்.

ஆங்கிலர் சென்றபின் அதே கல்வியின் தொடர்ச்சி வந்ததேயொழிய இந்நாட்டு மக்களுக்கு ஏற்ற சரியான கல்விமுறை மாற்றம் ஏற்படவில்லை. இந்தியாவில் உள்ள அனைத்துத் தேசிய இனங்களுக்குமான கல்வி முறையை உருவாக்க இந்திய அரசு முயலவில்லை.

தமிழ்நாட்டில் காமராசர் அனைவர்க்கும் கல்வியளிக்கும் முயற்சியாகத் தொடக்கக் கல்வி சார்பான பல முயற்சிகளை எடுத்துக்கொண்டார். என்றாலும் எவ்வகைக் கல்வியைக் கொடுக்கப் போகிறோம் என்ற அளவில் சரியான கல்வி முறையை ஏற்படுத்தித்

*தருவதில் அவரது முயற்சி முழுமை பெற்றுவிடவில்லை என்றே கூறலாம். இதற்கிடையில் படிப்படியாக மாநிலப்பட்டியலிலிருந்த கல்வித்துறை நெருக்கடி காலத்தில் நடுவணரசுப்பட்டியலுக்குக் கொண்டு செல்லப்பட்டது.*

*உலக அளவில் உள்ள ஒவ்வொரு துறையிலும் கல்வி முன்னேற்றச் செய்திகளை அந்நாட்டுக் கல்வியில் கொண்டுவந்து அந்நாட்டு மக்கள் அவற்றைப் பெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தருவதே ஓர் அரசின் கடமையாகும். அக்கடமையை உலகில் உள்ள எல்லாச் சிறுநாடுகளும் செய்து வருகின்றன.*

*பன்மொழி, பல தேசிய இன மக்களின் கூட்டு நாடான இந்தியா, இந்தி, சமற்கிருத மொழிகளின் முன்னேற்றத்திற்குமட்டும் தொகையை வாரி வழங்குகிறது.*

*இந்தியாவில் உள்ள அனைவரும் இந்தியை மட்டுமே கல்விக்காகப் பயன்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டை இந்திய அரசு முன்வைத்துக் கொண்டு, இந்தியாவிலுள்ள அனைத்து மொழியினரும் அவரவர் தாய்மொழியினின்றும் தங்கள் தாய்மொழி வழிக் கல்வி என்ற நிலையினின்றும் விலகி இந்தியைப் பொது மொழியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற ஏற்பாட்டில் முனைப்பு காட்டுகிறது.*

*வணிக வயமாகிவிட்ட கல்வி, தனியாரின் கைக்குப் போய்விட்ட தால் தனியார் போகும் போக்குகளைப் பின்தொடரவேண்டிய நிலைக்கு அரசு தன்னை ஆட்படுத்திக் கொள்கிறது.*

*இந்திய மக்கள் நல்ல மூளையுழைப்பாளிகளாகவும் மலிவாகவும் கிடைப்பதால், பன்னாட்டு நிறுவனங்கள் வேலைவாய்ப்பில் ஒரு முகாமையான பங்கை உருவாக்கிக் கொண்டன. இந்நிலையில் அரசே கூட கல்வித்துறையில் ஒரு பெரிய தாக்கத்தையோ மாற்றத்தையோ ஏற்படுத்திவிட முடிவில்லை.*

*தனியார்க் கல்வி நிறுவனங்களுக்கு இந்நாட்டின் முன்னேற்றமோ இந்நாட்டு மக்களின் முன்னேற்றமோ நோக்கமன்று. பன்னாட்டு நிறுவனங்களுக்குத் தேவையான தகுதியில் இந்நாட்டு மக்களுக்குப் பயிற்சி கொடுத்துத் தங்கள் வணிகத்தை வளப்படுத்திக் கொள்வது மட்டுமே நோக்கம். அப்பணியை அவை செவ்வனே செய்து வருகின்றன.*

*இதனால் பன்னாட்டு நிறுவனங்களின் தேவைக்குத்தகக் கல்வித் திட்டத்தைத் தனியார்க் கல்வி நிறுவனங்கள் உருவாக்கிக் கொள்வதும் அரசு அவற்றின்பின் செல்வதுமான இழிநிலை ஏற்பட்டுவிட்டது.*

*அதனாலேயே அரசு, பள்ளிகளிலும் ஆங்கிலவழிக் கல்வியை நுழைக்கவேண்டிய திட்டங்களை எண்ணிப் பார்க்கிறது.*

இந்தியா முழுவதும் இதேநிலை என்றாலும் தமிழ்நாட்டில் ஆங்கில வழிக்கல்வி நுழைப்பு இந்தியாவுக்கே ஒரு முன்னோடித் திட்டமாக உருவாக்கப்பெறுகிறது.

இது அனைத்து மாநிலத் தாய்மொழிக் கல்வியையும் அடியோடு அழித்துவிடும் திட்டமாகும்.

இந்திய நடுவணரசுப் பட்டியலிலிருந்து கல்வித்துறையை மாநில அரசுப் பட்டியலுக்குக் கொண்டு வரவேண்டும் என்று அனைவரும் பாடுபட்டுக்கொண்டிருக்கும் இந்நேரத்தில் தமிழக அரசு ஆங்கிலவழிக் கல்வியைக் கொண்டுவர எண்ணுவது சரியான திட்டமன்று.

இதனால் அழிக்கப்படுவது தாய்மொழிக் கல்வி மட்டுமன்று - மரபு அடையாளங்களும் ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் மரபு அடையாளங்கள் உண்டு; வேறுபட்ட கலை, பண்பாடு, நாகரிகங்கள் உண்டு; மரபு அறிவியலும் உண்டு; அவையெல்லாம் அடியோடு மறக்கப்பட்டுவிடும். எடுத்துக்காட்டாக, இந்நாட்டு மருத்துவம் போன்றவற்றை அறிவியல்படுத்தி இக்கால ஆய்வுக்குட்படுத்தி உலக அளவில் கொண்டு செல்ல முனையும் இந்நாட்டுத் தேசிய இனமக்களின் கடமை திசைதிருப்பப்பட்டுப் புறக்கணிக்கப்பட்டுவிடும்.

எந்தவொரு நாடும் அது சிறியதாக இருப்பினும் பெரியதாக இருப்பினும் அவரவர்களின் மரபுக்கலை, பண்பாடு, நாகரிகம், அறிவியல் ஆகியவற்றை உலக அளவிற்குக் கொண்டு சென்று பரப்புவதற்கே பாடுபடுகின்றன.

அதுபோன்று நாமும் நம் மரபு அறிவை அறிவியல்படுத்தி மேம்படுத்தம் செய்யவேண்டும். அதற்கு நம் தாய்மொழி வழி கல்விமட்டுமே பயன்படும்.

இன்றைக்கு 80 விழுக்காட்டு மாணவர்கள் தாய்மொழியிலேயே கல்வி பயின்று வருகின்றனர். அவர்கள் படிப்படியாக இப்போதுதான் சிறிதளவு முன்னேற்றமும் பெற்று வருகின்றனர். ஆங்கிலவழிக் கல்வித் திட்டம் அவர்களைத் திசைதிருப்புவதோடு இப்போது பெற்றுவரும் முன்னேற்றத்தையும் அடியோடு வீழ்த்திவிடும்.

எனவே தமிழக அரசு ஆங்கில வழிக் கல்வியை அரசுப் பள்ளியில் நுழைக்கும் எண்ணத்தைக் கைவிட்டு, நடுவணரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் கல்வித்துறையை மாநில அரசின் கட்டுப்பாட்டிற்குக் கொண்டுவர அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளவேண்டும். கல்வி மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருந்தால் மட்டுமே தம் மாநில மக்களுக்குத் தகுந்த கல்வியையும், தரமான கல்வியையும் தர ஏதுவாக இருக்கும்.

**- மாகுன்றன்**

தொடர் –27



# வேத வெறி இந்தியா

– தமிழரசு –

## பழந்தமிழ் இலக்கியங்களில் வேதங்கள்

தமிழக வரலாற்றில் தமிழ் இலக்கியங்கள் முகாமையான பங்கு வகிக்கின்றன. தமிழ் இலக்கியங்களின் கால ஒழுங்கமைவுகளில் மாறுபட்ட கருத்துகள் சில நிலவுகின்றன.

இருப்பினும் அவற்றில் உள்ள கால வகைப்பாடுகளில் உள்ள முரண்பற்றிய ஆய்வுக்குள் நுழையாமல், தமிழ் இலக்கியங்களுள் வேதங்கள் பற்றிய பதிவுகளே இங்கே குறிக்கப்படுகின்றன.

கழகக் கால இலக்கியங்களாகக் குறிக்கப்படுவன பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் என்பன என்பதை அனைவரும் அறிவர். அவற்றுள் வேதங்கள் பற்றிய குறிப்புகளைக் காணலாம்.

### கழக இலக்கியங்களில் :

வேதம், வேதநெறி, வேதமா, வேத முதல்வன், வேத வேள்வித் தொழில், வேதியர் - என்கிற வகையில் எல்லாம் வேதம் குறித்த சொற்கள் கழக இலக்கியங்களுள் ஆங்காங்கே சில இடங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

'சிறந்த வேதம் விளங்கப் பாடி' **(468)**
'ஓதல் அந்தணர் வேதம் பாட' **(656)**

- என்ற வகையில் மதுரைக்காஞ்சியிலும்,

'அறத்தினுள் அன்பு நீ; மறத்தினுள் மைந்து நீ
வேதத்து மறை நீ; பூதத்து முதலும் நீ' **(3–66)**
'ஆதி அந்தணன் அறிந்து பரிகொளுவ
வேத மா பூண் வையத்தேர் ஊர்ந்து' **(5–23)**

- என்ற வகையில் **பரிபாடலிலும்**,வேதம் பற்றிய பதிவுகள் உண்டு.

ஆயினும், அவற்றில் வேதம் என்பதை இருக்கு வேதமாகவோ, நான்கு வேதங்களுமாகவோ எண்ண இயலாது.

மேலும், வேதம் விளங்கப் பாடி - என்பதில், தமிழர்க்கு விளங்காத வடமொழி இருக்கு வேதத்தை 'விளங்கப் பாடி' என்று சொல்லியிருக்க இயலாது.

எனவே, விளங்கும்படியாகப் பாடுதலுக்குரியதாக மதுரைக் காஞ்சியில் சொல்லப்படும் வேதத்தை ஆரிய வேதங்களாக எண்ண இயலவில்லை.

அதேபோல், மதுரைக்காஞ்சியில் அறவோரே அந்தணர் எனக் காட்டப்படுகிறவகையில் அறவோராகிய அந்தணர் பாடும் வேதம் ஆரிய வேதமாக இருக்க வழியில்லை.

தமிழ் வேதங்களாகவும், மறைகளாகவும் பாடல் நூல்கள் வேறு இருந்திருக்க வேண்டும் என்றே எண்ண வேண்டியிருக்கிறது.

"பனிபுலர்பு ஆடி, பருமணல் அருவியின்
ஊதை உயர்தர, உறைசிறை **வேதியர்**" (11–84)

- என்று பரிபாடலில் குறிப்புண்டு.

வேதத்தின் வேள்வி முறையைக் குறிப்பதாக,
"எருவை நுகர்ச்சி **யூப** நெடுந்தூண்
**வேத** வேள்வித் தொழின் முடித் ததூஉம்" (224)

- எனக் கருங்குழலாதனாரின் புறநானூற்றுப் பாடல் குறிப்பிடும்.

புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றில் (எண்.15, 224) இடம் பெற்றுள்ள வேள்வி, வேதவேள்வி எனும் பதிவுகள் ஆரிய வேள்வி தழுவிய நிலைகளையே குறித்திருக்கிறது என்று எண்ண வழியுண்டு.

வேள்வித் தூணைப் பற்றி இருக்கு வேதத்தில் குறிக்கப்பட் டிருக்கும் 'யூப' - எனும் வட சொல்லிலேயே புறநானூற்றிலும் குறித்திருக்கிறார்கள். யூப - என்பது யக்ஞத் தூணைக் குறிக்கும் சமசுக்கிருதச்சொல் என்பது மட்டுமன்றி, அது இருக்கு வேதத்திலும் அதே சொல்லில் குறிக்கப்பட்டுள்ளது.

ஆக, அப் பாடல்களில் உள்ள வேள்வி என்பது ஆரிய வேத வேள்விகள் அறியப்பட்டபின், அவற்றைப் பார்த்துத் தமிழ் அரசர்களால் அல்லது நிலவுடைமையாளர்களால் ஆரியச் சார்பில் மேற்கொள்ளப்பட்ட வேள்விகளாக இருத்தல் வேண்டும்.

"பால்அல் புளிப்பினும் பகல் இருளினும்
**நாஅல் வேத** நெறி திரியினும்"

- என்கிற வரிகளில்,

'பால் தன் இனிமையொழிந்து புளிப்பினும், ஞாயிறு தன் விளக்கமொழிந்து இருளினும், நான்கு வேதத்ினது ஒழுக்கம்

வேறுபடினும், வேறுபாடில்லாத சூழ்ச்சியையுடைய மந்திரிச் சுற்றத்தோடு; ஒழியாது நெடுங்காலம் விளங்கித் துளக்கமின்றி நிற்பாயாக' - என்பதாகச் சேரமான் பெருஞ்சோற்றுதியஞ் சேரலாதனை முரஞ்சியூர் முடிநாகனார் (புறநானூறு.2) பாடுவார்.

- மேற்படி பாடலில் வேதங்கள் ஒழுக்க நெறி கொண்டனவாகக் காட்டப்படுவதும், அவை நான்கு எனக் குறிக்கப்படுவதும் ஆய்வுக்குரிய செய்திகள்.

வேதங்கள் நான்கு என்று குறிக்கப்படுவதிலிருந்து இப்பாடல் கி.பி.இரண்டு அல்லது மூன்றாம் நூற்றாண்டினதாகவோ அல்லது அதற்கும் பிந்தையதாகவோதாம் இருத்தல் வேண்டும் என்று கருத வேண்டியுள்ளது.

அதற்கு முந்தைய காலங்களில் வேதங்கள் நான்காக உருக்கொள்ளவில்லை என்பது அறியப்பட வேண்டுவது.

"நல்பனுவல் **நால்வேதத்து**
அருஞ்சீர்த்திப் பெருங்கண்ணுறை" (15)

- எனும் புறநானூற்றுப் பாடலும் பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் புகழ்ந்து பாடியதே. நெட்டிமையார் பாடிய இப்பாடலில், நால் வகைப்பட்ட வேதத்தினும் எனும் பொருளில் வேதங்களின் நான்கு வகைப்பாட்டின் குறிப்பு கவனிக்கத் தக்கது.

மேற்சொன்ன வகையிலே நால்வேதம் என்றிருப்பதால் இப் பாடலின் கால நிலையையும் அவ்வாறே எண்ண வேண்டியுள்ளது.

மற்றபடி, கழக இலக்கியங்கள் பலவற்றுள் குறிக்கப்பட்டிருக்கும் 'நான்மறை' - எனும் சொல் நான்கு வேதங்களைக் குறிப்பதாகவே சிலர் கருத்தறிவிக்கின்றனர்.

மேலும், சிலர் நான்மறை என்பது மூலமறை என்கிற குறிப்பில் இருக்கு வேதத்தைக் குறிக்கும் என்பர்.

ஆனால் நான்மறை என்பது நான்கு மறைகள் எனும் பொருளில் நான்கு வேதங்களும் அன்று என்றும், மூலமறை எனும் பொருளில் இருக்கு வேதத்தைக் குறிப்பிடுவதும் அன்று என்றும் ஏற்கனவே விளக்கியிருக்கிறோம்.

பனம் பாரனாரின் தொல்காப்பியப் பாயிரத்தில் உள்ள,

"அறம் கரை நாவின் நான்மறை முற்றிய
அதங்கோட்டு ஆசாற்கு அரில்தபத் தெரிந்து"

- என்பதில் குறிக்கப்பட்டிருக்கிற நான்மறை என்ற சொல்லும்,

“ஞாலம் நாறும் நலம் கெழு நல்இசை
**நான்மறை** முதுநூல் முக்கட் செல்வன்”

- *என்ற பரணர் பாடிய அகநானூற்றுப் (181) பாடலிலும்,*

“அந்தணாளர்
**நான்மறை** குறித்தன்று அருளா காமையின்
அறம் கறித்தன்று பொருள் ஆகுதலின்”

- *எனும் சிறுவெண் பேரையரின் புறநானூற்றுப் (362) பாடலிலும்,*

“ஆடுகளம் வேட்ட வடுபோர்ச் செழிய
ஆன்ற கேள்வி யடங்கிய கொள்கை
**நான்மறை** முதல்வர் சுற்றமாக”

- *என்று மாங்குடி கிழார் மருதனாரின் புறநானூற்றுப் (26) பாடலிலும்,*

“அறம்புரி கொள்கை **நான்மறை முதல்வர்**
திறம்புரி பசும்புற் பரப்பினர் இடப்பி”

- *என்று ஔவையார் பாடிய புறநானூற்றுப் (93) பாடலிலும்,*

*நான்மறை பற்றிய பதிவுக் குறிப்புகள் வந்திருந்தாலும், அவை எவையும் வேதத்தைக் குறிப்பிடவில்லை என்பதை அறிய வேண்டும்.*

*நான்மறை என்பது நான்கு மறை எனும் பொருளில் நான்கு வேதங்களும் இல்லை, மூலமறை என்கிற பொருளில் இருக்கு வேதத்தைக் குறிப்பிடுவதும் அன்று என்று விரிவாக ஏற்கனவே விளக்கியிருக்கிறோம்.*

அதேபோல் மறை என்பதும் வேதத்தைக் குறித்ததாகாது.

“அளவு இறந்து இசைத்தலும் ஒற்று இசை நீடலும்
உள என மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்”

– என்றும்,

“அளபிற் கோடல அந்தணர் மறைத்தே”

- *என்றும் தொல்காப்பியத்துள் வருகின்ற மறை என்பது பொதுப்பட நூல்களையும் சிறப்பாக அறவோர்களாகிய அந்தணர்களின் நூல்களையுமே குறிக்குமேயன்றி வேதத்தைக் குறித்ததாகாது.*

திருக்குறளில் வரும்,

“நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி வரும்” (28)

- *என்பதிலும்,*

“அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
நின்றது மன்னவன் கோல்” (543)

- *என்பதிலும்,*

"மறப்பினும் ஓத்துக் கொளவாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கம் குன்றக் கெடும்" (134)

- என்பதிலும் மறை என்பதும், நூல் என்பதும், ஓத்து என்பதும் வேதத்தைக் குறிப்பனவன்று.

*பரிமேலழகர் உள்ளிட்ட ஆரியக் கருத்தாளர் பலரும் அவற்றையெல்லாம் வேதம் எனக் காட்டுவது எந்த வகையில் பிழைபாடானது என்பது ஏற்கனவே விளக்கப்பட்டிருக்கிறது.*

**பாவியங்களில் :**

*இரண்டாம் நூற்றாண்டுக்குரிய பாவியமாகப் பெரும்பான்மை அறிஞர்களால் ஒப்பப்படுவது சிலப்பதிகாரம். வையாபுரியார் - இக்பாவியத்தை எட்டாம் நூற்றாண்டுக்குரியதாகக் கூறுவது பொருத்தமற்றது என்று கே.கே.(பிள்ளை) உள்ளிட்ட பலரும் மறுத்திருக்கின்றனர்.*

*சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவக சிந்தாமணி, குண்டலகேசி, வளையாபதி ஆகிய பெருங்காப்பியங்களுள் சிலப்பதிகாரம், மணிமேகலையில் இடம் பெற்றுள்ள வேதங்கள் பற்றிய பதிவுகள் ஆய்வுக்குரியன.*

பண்ணவன் எண் குணன் பாத்தில் பழம்பொருள்
விண்ணவன் **வேதமுதல்வன்** விளங்கு ஒளி
ஓதிய **வேதத்தொளி** யுறின் அல்லது

*- எனும் சிலப்பதிகார (10:188-190) வரிகள் அருகனைப் புகழ்வதாக உள்ளனவேயன்றி அது ஆரிய வேதத்தைக் குறிப்பிடுவதாக இல்லை.*

"கடவுளாய், எண்குணங்களுடையோனாய், பகுத்தற்கரிய பழம் பொருளாயுள்ளோனாய், மேலுலகத்துள்ளோனாய், ஆகமம் மூன்றிற்கு முதலாயுள்ளோனாய், அறியாமை என்னும் இருள் நீங்க விளங்கும் ஒளியாயுள்ளவனாய் – மேற்கூறிய பெயர்களையுடைய ஆகமத்தின் கண் விளங்கும் ஒளியாகிய அருக தேவனைச் சார்ந்தாலல்லது பிறவியாகிய மூடப்பெற்ற அறையிலுள்ளார் வெளிவாரார் என்று சாரணர் தலைவர் கூற....."

*- என்று மேற்கூறிய வரிகளுக்கு நா.மு.வேங்கடசாமியார் உரையெழுதுவார்.*

*ஆக, வேதமுதல்வன் என்போன் அறிவு முதல்வன், மறை முதல்வன் என்றேதான் பொருள் தரும்படி உள்ளது.*

*சிலப்பதிகார அடைக்கலக் காதையில் மாடல மறையோனை இளங்கோ அடிகள் அறிமுகப்படுத்துகிறபோது,*

*தாழ்ந்த நீரை வேலியாகவுடைய தலைச்செங்காடு எனும் ஊரில் நான்மறையில் அறிவுத் தேர்ச்சியுற்ற நன்மையை விரும்பும் கொள்கையுடைய மறையவர் முதல்வகைத் தலைவனாக உள்ள மாடலன் என்பான் என்னும் பொருளில் :*

"தாழ்நீர் வேலித் தலைச் செங்கானத்து
நான்மறை முற்றிய நலம்புரி கொள்கை
மாமறை முதல்வன் மாடலன் என்போன்" **(15:11–13)**

– என்று கூறுவார்,

*ஆக, மாமறை முதல்வன் எனும் மொழிவு போலவே, வேத முதல்வன் என்பதும் மறை முதல்வன் எனும் பொருளுடையதே.*

*மற்றபடி, சிலப்பதிகாரத்தில் வேதம் என்றோ, இருக்கு வேதம் என்றோ நான்கு வேதங்கள் என்றோ எங்கும் ஆரிய வேதங்களைப் பற்றிய குறிப்புகள் இடம் பெறவில்லை என்பது கவனிக்கத்தக்கது.*

*மறை - என்பது ஆரிய வேதத்தைக் குறிப்பிடாதது போலவே, மறையோர் - என்போரும் ஆரிய வேதம் அறிந்தோர் எனும் பொருளுடையவருமல்லர்.*

*சாக்கையர், கணியர், நிமித்திகர், பார்ப்பார் என்றெல்லாம் அழைக்கப்பட்டு வந்த வள்ளுவர்களோ அரசர்க்கும் பிறருக்கும் கருமத் தலைவர்களாயிருந்து நாள்மீன், கோள்மீன் பார்த்து நல்லது கெட்டதைப் பற்றிச் சொல்லி வந்ததுடன், பிறப்பும் மணமும் இழவும் முதலான வாழ்வியல் நடப்புக்குரிய சடங்குகளை நடாத்தி வந்தனர். பாணர்களும், புலவர்களும் பாக்களை இயற்றியும், மன்னர்க்கு அறிவுத் துணையாய் விளங்கியும் அரசியலை வழிநடத்துநர்களாக இருந்தனர் - என அயோத்திதாசப் பண்டிதர் (தொகுதி:1, பக்.127) கூறியிருப்பதை அறிஞர் குணா எடுத்துக்காட்டுவார்.*

*காலப்போக்கில் கணியன் (சோதிடன்), நிமித்திகன் (கால, நேரம் பார்ப்போன்), சாக்கையன், வள்ளுவன், பார்ப்பான், மறையோன் - என்னும் வெவ்வேறு தொழிற்பெயர்கள் மயங்கி ஒன்றாகிவிட்டன - என்று அறிஞர் குணா கருத்துரைப்பார். (வள்ளுவப் பார்ப்பாரியம், பக்.84)*

*ஆக, மறையோர் - என்போர் மறை பொருளறிவு அறிந்த அறிஞர்கள் என்பதை அறியலாம்.*

*மாமுது பார்ப்பான் (சிலப்.1-52), தூய மறையோன் (சிலப்.9-28), மங்கல மறையோர் இருக்கை (சிலப்.10-143), மாங்காட்டு மறையோன் (சிலப்.11-99), பார்ப்பார் (21-54), வண்டமிழ் மறையோன் (23-63), மங்கல மறையோன் (27-163) என்றெல்லாம்*

குறிக்கப்பெற்றிருப்போர் யாவரும் தமிழ்ப் பார்ப்பாரும் கால, நிமித்தம் பார்ப்பாரும், தமிழ் மறையோருமே யாவர்.

"அறவோர்க் களித்தலும் அந்தண ரோம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்வோர் சிறப்பின்"

- என்று (சிலப்.16-70) அறவோர், அந்தணர், துறவோர் எனக் கூறப்பெறுவோர் எவரும் தமிழ் அறிவர்களே அன்றி ஆரியப் பார்ப்பனர் அல்லர்.

"கரும வினைஞரும், கணக்கியல் வினைஞரும்
தரும வினைஞரும் தந்திர வினைஞரும்"

- எனக் (சிலப்.26-40) குறிக்கப் பெறுவோரையும் அந்தணரும், கணக்கியலரும், அறங்கூறும் தொழிலோரும், தந்திரத் தொழிலோரும் என்றே ந.மு.வேங்கடசாமியார் தம் சிலப்பதிகார உரையுள் விளக்குவார்.

மேலும்,

"பாத்தரு நால்வகை மறையோர் பறையூர்க்
கூத்த சாக்கையன் ஆடலில் மகிழ்ந்து"

- எனக் (சிலப்.28-76) குறிக்கப்பெறுவதிலும், பகுத்துப் பார்க்கவல்ல நால்வேறு வகையான மறையோர்கள் வாழும் ஊரிலிருந்து கூத்துச் சாக்கையர்கள் சேரன் செங்குட்டுவனின் முன்னால் ஆடினர் என்று பொருள் தெளிவு பெறலாம்.

ஆக, மறையோர், அந்தணர், பார்ப்பார், அறவோர் - என்கிறபடியான அறிவு நிலை முதல்வர் என்கிறபடியோ, மறை முதல்வர் என்கிறபடியோதான் சிலப்பதிகாரத்தில் தமிழ் அறிவர்களைப் பற்றிய பதிவுகள் உள்ளன.

வட ஆரிய வேந்தர்கள் தமிழை, தமிழரை இகழ்ந்ததான செயல்களில் செங்குட்டுவனைச் சினப்பட வைத்ததும், போரிட வைத்ததுமான கருத்துடைய நிலை கொண்ட இளங்கோ அடிகள் ஆரிய வேதத்தைப் போற்றியதாகவோ, அதைச் சான்று கூறியதாகவோ கருத வாய்ப்பில்லை.

"மல்லன் மாஞாலத்து வாழ்வோர் மருங்கில்
செல்வம் நில்லாதென் பதைவெல் போர்த்
தண்டமிழ் இகழ்ந்த ஆரிய மன்னரின்
கண்டனை யல்லையோ காவல் வேந்தே"

- என்று மாடல மறையோன் பேசுவதாக இளங்கோ அடிகள் காட்டுவது (சிலப்.28-151) கவனிக்கத்தக்கது.

"மாட மறுகும் மறையோர் இருக்கையும்
வீழ்குடி உழவரோடு விளங்கிய கொள்கை
**ஆயுள் வேதரும்** காலக் கணிதமும்
பால்வகை தெரிந்த பன்முறை இருக்கையும்"

*- என்பதிலும் (சிலப்.5-45) ஆயுள்வேதர் - என மருத்துவ நூலோரே குறிக்கப்பெறுகின்றனர்.*

*அதேபோல,*

"**வேதமுதல்வன்** பயந்தோன் என்பது
நீ அறிந்திலையோ நெடுமொழியன்றோ !"

*- என்பதிலும் (14-48, 49)*

"**வேதமுதல்வன்** வேள்விக் கருவியோடு
ஆதிப் பூதத்து அதிபதிக் கடவுளும்"

*- என்பதிலும் (22-33, 34) குறிக்கப்பட்டிருக்கும் வேத முதல்வன் என்பதும், மறையோர் முதல்வன் என்றாகுமேயன்றி, ஆரிய வேதங்களுக்குரிய முதல்வனல்லன் - என்பதைத் தெளிவுபடுத்திக் கொள்ளல்வேண்டும்.*

*அடுத்து, சிலப்பதிகாரம் குறிப்பிடும் நான்மறை என்பது, மேலும் சிலவற்றைத் தெளிவுபடுத்திச் சொல்கின்றது.*

*கருமவினைஞரும் (அந்தணர்களும்), கணக்கியல் வினைஞரும் (கணியர்களும்), தரும வினைஞரும் (அறங்கூறும் தொழிவோர் களும்), தந்திர வினைஞரும் (கால நிமித்த - தந்திரம் பார்ப்போரும்) எனும் நால்வகை மறையோர்களின் மறைபொருள் அறிவையே நான்மறை என்றும், அவர்களையோ அன்றி அவ்வறிவு வழிப் பட்டவர்களைத்தாம் நான்மறையாளர் என்றும் சிலப்பதிகாரம் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது.*

*மதுரை மாநகர் புகுகையில், மதுரையில் காணும் சிறப்புகள் குறித்துக் கூறும்போது :*

"நான்மறை அந்தணர் நவின்ற ஓதையும்
மாதவர் ஓதி மலிந்த ஓதையும்...."

*- எனக் (சிலப்.13-146) குறிப்பிடுவதில் நான்மறை அந்தணர் என்பது நான்மறையோர்களின் மறைபொருள் அறிவுடைய அந்தணர்கள் நவிலும் ஓசையும் என்பதே பொருளுடையது.*

*மாறாக, நான்மறை என்பதை நான்கு வேதங்களை ஓதும் ஓசையும் என்பது, பொருள் திரித்துக்கூறுவதே.*

*ஆரிய வேதங்கள் பற்றி ஏதும் குறிப்பிடாத சிலப்பதிகாரத்தில், ஆரிய வேதங்கள் பற்றிச் செருகலைச் செய்வது சூர்ச்சியே அன்றி வேறன்று.*

"**நான்மறை முற்றிய** நலம்புரி கொள்கை" (சிலம்பு : 15–12)

***நான்மறை மரபின்*** *(15-175),* ***நான்மறை முற்றி*** *(23-68), நலம்புரி கொள்கை* ***நான்மறை யாள*** *(11-152),* ***நான்மறையாள*** *யாதுநீ கூறிய (27-54),****நான்மறையாளன்*** *செய்யுள் கொண்டு (28-137),* ***நான்மறை மரபின்*** *நயம் தெரிநாவின் (28-195) என்றெல்லாமும்,*

"**நான்மறை மருங்கின்** வேள்விப் பார்ப்பான்
அருமறை மருங்கின் அரசர்க்கு ஓங்கிய
பெருநல் வேள்வி நீ செயல் வேண்டும்"

*- என்றும் கூறப்படுவதில் உள்ள நான்மறை என்பதெல்லாம் நான்மறையாளர் என்றும், அவர்களின் கருத்து என்பதாகவுமே காட்டப்படுகிறது.*

*நான்மறை மரபு என்பதும், நான்மறை முற்றிய என்பதும், நான்மறையாளர்களின் மரபையும் அவர்களின் நலம் தரும் கொள்கையின் முதிர் நிலையையுமே தெரிவுபடுத்தும்.*

*நான்மறை மருங்கின் என்பது அருமறை மருங்கின் என்பதோடு பொருந்திய பொருளாக உள்ளது கவனத்திற்குரியது.*

*மற்றபடி, நான்மறை மருங்கு என்பதை நான்கு ஆரியவேத நூல்கள் என்பதாகப் பொருள் கொள்ளுவது பிழையானது. நான்மறையோரின் அறிவு சார்ந்த நூல்கள் குறிப்பிடும் வேள்வி, கால நிமித்தம் பார்க்கும் பார்ப்பன மறையோரின் அருமறை நூல்கள் வழியாக அரசர்க்குரிய பெரிய நல்ல வேள்வி என்பதான பொருளையே அவ்வரிகள் தருகின்றன.*

*மேலும், அத்தகைய நான்மறை மருங்கு வேள்வியையே அறக்கள வேள்வி என்றும் சிலப்பதிகாரம் (28-131) குறிப்பிடுவதைக் கவனித்தல் வேண்டும்.*

*ஆக, தொகுமொத்தத்தில் பார்க்கும்போது, தமிழ் நான்மறையோர்களின் சிறப்புகளை விளக்கியும், அவர்தம் அற உணர்வுகளின் வாழ்வியல் சிறப்புகளை எடுத்து விளம்பவுமான உட்பொருளுடைய பேரிலக்கியமாகவே சிலப்பதிகாரம் தென்படுகிறது. அவ்வுட்பொருள்களையே வேத (அறிவு) ஒளி என்பதாகச் சிலப்பதிகாரம் காட்டுகிறது. அவ் விளக்கொளி பெற்றோனையே வேத (அறிவு) முதல்வன் என்கிறது. மற்றபடி வேத ஒளி என்று சிலப்பதிகாரம் சொல்வது ஆரிய வேதங்களான இருக்கு முதலான வேதங்களைச் சொன்னதன்று என்பதில் தெளிவு கொள்ளுதல் வேண்டும்.*

– தொடரும்.....

## எப்படிச் சிங்களர் பெரும்பான்மை ஆயினர் ?

# காரியவாசம் அறிக்கையும், இந்தியா கமுக்கமாகச் செய்யும் கீழறுப்பும் !

–அருகோ–

*இலங்கையில் வாழ்கின்ற தமிழர்கள், சிங்களர்கள் என்ற இரு தேசிய இனங்களில் சிங்களரையே இந்திய வம்சாவளியினர் என்றும், தமிழர்களை ஆகாத கூட்டத்தார் என்றும், இந்தியத் தலைமை, தொடக்கம் முதல் திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறது என்பதை, நாம் என்றைக்கு ஈழச்சிக்கல் பற்றி எழுதத் தொடங்கினோமோ அன்று முதல் சொல்லி வருகிறோம்.*

### காரியவாசம் உடைத்த பூட்டு

*அதையே இந்தியாவுக்கான இலங்கைத் தூதர் பிரசாத் காரியவாசம் என்பார் 19.03.2013 அன்று, இலங்கை ஊடகம் ஒன்றின் வழியாக எல்லா இந்திய ஊடகங்களுக்கும் மின்னஞ்சல் செய்து உறுதிப்படுத்தியிருக்கிறார். தமிழ்மாணவர்கள் போராட்டத்திற்கு ஆதரவாக வடநாட்டு மாணவர்கள் வந்துவிடக்கூடாது என்று அவர்களின் சிந்தனையைத் திசை திருப்பி யுள்ளார்.*

*உடனே எய்தவனிருக்க, அம்பை நோவதுபோல தமிழ்நாட்டுத் தலைவர்களாக உலாவரும் பலரும் அதைக் கடுமையாகக் கண்டித்தும், காரியவாசத்திடம் அரசு விளக்கம் கேட்கவேண்டும் என்றும், அவரை உடனடியாக நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும் என்றும் அறிக்கை விட்டுள்ளனர்.*

### வெள்ளிடை மலை

*ஆனால், அவரை அழைத்து இந்திய அரசாங்கம் விளக்கம் கேட்டதாகவோ, அவரை அதற்காகக் கண்டித்ததாகவோகூட இதை எழுதும்வரை எந்தச் செய்தியும் வரவில்லை. ஏனென்றால், இந்திய அரசு, அவர் கூறுவதை ஏற்பதுபோலவே இலங்கைச் சிக்கலில் செயல்பட்டு வருகிறது என்பது வெள்ளிடைமலையாகும்.*

### மகாவமிசமும் மயிலை சீனி.வேங்கடசாமியும்

*ஆனால், திட்டமிட்டுத் தமிழர்க்கெதிராகப் புனையப்பட்ட 'மகாவம்சம்' நூலை அடிப்படையாக வைத்து இலங்கை வரலாற்றைக் காண்பது குருடன் யானை பார்த்த கதையே ஆகும்.*

*ஏனெனில், தமிழ்நாட்டில் பௌத்தம் பரவியிருந்த காலத்தில் காஞ்சியிலிருந்தே இலங்கையிலும் பௌத்தம் பரவியதாக, சிறந்த*

வரலாற்றாசிரியரான மயிலை சீனி.வேங்கடசாமி என்பார் மறுக்க முடியாத அடிப்படைகளுடன் நிலைநாட்டியுள்ளார்.

**காஞ்சி மாநகரம்**

வைதிக மதம் மீண்டும் பரவுவதற்கு முன்னர்க் காஞ்சி மாநகரம் பௌத்த காஞ்சி, சைன காஞ்சி என்றே வழங்கியிருக்கிறது.

இன்று மியான்மர், தாய்லாந்து, கம்போடியா, வியட்நாம், இலாவோசு, சீனா, மங்கோலியா, கொரியா, யப்பான் எனப் பல நாடுகளில் பௌத்தம் பரவியதற்குக் காஞ்சிபுரமே நடுவப் புள்ளியாக இருந்திருக்கிறது. தமிழ்ப் பௌத்தர்களே அங்கெல்லாம் புத்தமதத்தைப் பரப்பியுள்ளனர். நாளந்தா பல்கலைக் கழகத்துக்கே முதல் தலைவராக ஒரு தமிழர்தானே இருந்திருக்கிறார் !

**‘வைதீகம்’ வளர்ந்த வழி**

இன்னும் சொன்னால் திபெத்தில் ‘இலாமா’ எனும் புதிய பௌத்தப் பிரிவைத் தமிழர்களே நிறுவியுள்ளனர்.

ஆயினும், ‘வைதீக’த்தின் படையெடுப்புக் காரணமாகத் தமிழ்நாட்டில் பௌத்தம் இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. அதுவும்கூட சமணர்கள் - பௌத்தர்களிடையே ஏற்பட்ட சண்டையால் ‘வைதீகம்’ இடையில் புகுந்து இரண்டையுமே வீழ்த்திவிட்டது என்பார்கள்.

**மதப்பற்றின் மொழிப்பகை**

இன்று காஞ்சி மாநகர் சிவகாஞ்சி, விட்டுணு காஞ்சி எனக் காணக்கிடப்பினும், பௌத்த காஞ்சி, சைன காஞ்சி என்ற சொல்லாட்சியும் மறைந்துவிடவில்லை என்பதை மறந்துவிடக்கூடாது.

அப்படி இலங்கை சென்ற பௌத்த மதம் அங்கு தழைத்தோங்கி யிருந்த காலத்தில் தமிழ்நாட்டில் மீண்டும் வைதீக மதம் தலைதூக்கியதைக் கண்ட தமிழ்ப் பௌத்தர்களே தமிழ்நாட்டின்மீது வெறுப்பும் பகையும் வளர வழிசெய்தார்கள் என்றும், அதற்காகப் புனையப்பட்டதுதான் ‘மகாவம்சம்’ என்றும் கூறுவர்.

**திருஞான சம்பந்தர்**

ஏனெனில், தமிழ்நாட்டில் சிவச்சமயச் ‘சண்ட மாருதமாக’க் கிளம்பிய திருஞான சம்பந்தர், தமிழ்நாட்டின் ஊர்கள்தோறும் சென்று தேவாரப் பதிகம் பாடியிருப்பதைப் போலவே இலங்கையின் திருகோணமலை, திருக்கேதீச்சரம் ஆகியவற்றையும் பாடியுள்ளார்.

*உள்ளபடி பௌத்தம் இலங்கையில் பரவுவதற்கு முன்பு அங்கு தெற்கு, வடக்கு, கிழக்கு, மேற்கு, நடுவப்பகுதி என ஐந்து சிவத்தளங்கள் (ஈச்சுவரங்கள்) இருந்தன என்பர். அந்த ஐந்தையுமே திருஞானசம்பந்தர் பாடித்தான் இருப்பார்; மற்ற மூன்றுக்குமான தேவாரப் பாடல்கள் இப்போது கிடைக்காமல் போய்விட்டன என்று சொல்வாருமுண்டு.*

**கட்டுக் கதைகள்**

*அதனால் தமிழைத் தொடர்ந்தால் இலங்கையிலும் புத்தம் போய்விடும் என்று, அதைத் தடுக்க எழுதப்பட்ட மகாவம்சத்தின் பல பகுதிகள் தமிழ்நாட்டின் நாகப்பட்டினத்தில் இருந்த நாகவிகாரையில் வைத்தே எழுதப்பட்டது என்பார் மயிலையார்.*

*ஆம்; அசோக மன்னனின் மகன் மகிந்தாவும், மகள் சங்கமித்ராவும் பௌத்தத்தைப் பரப்ப இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்பதே ஒரு மிகைக் கூற்று. தமிழ்நாட்டின் வழியேதான் இலங்கையில் பௌத்தம் பரவியது என்பதை மறைக்கவே - அங்குள்ளவர்கள் தமிழ்நாட்டைப் புறக்கணிக்கவே இந்தக் கட்டுக்கதை என்பார். அதுபோல் கௌதம புத்தரே இலங்கைக்கு 'அந்தர்த்தியான'மாகப் பறந்து வந்து காட்சி கொடுத்தார் என்பதும் கற்பனைக் கதையே.*

**தமிழா? புத்தமா?**

*மொழியுணர்வைவிட மதவுணர்வே தமிழர்களிடம் மிகுந்துள்ளது என்பதற்கு இன்று மொரிசியசு போன்ற நாடுகளில் வாழும் தமிழர்களே சான்று. இன்னும் சாதி மதத்தை விடாத அவர்கள், தமிழை விட்டுவிடவில்லையா? அதுபோல் மகாவம்ச காலத்தில் இலங்கையில் பெரும்பான்மையாக வாழ்ந்த தமிழர்களுக்குப் பௌத்தமா? தமிழா? என்று கேள்வி தோன்றியபோது தமிழையே விட்டுவிட்டார்கள். தமிழையே தொடர்ந்து பேசி வந்தவர்கள் சிறுபான்மையினராகி விட்டனர். அவர்கள்தான் இன்றைய ஈழத்தமிழர்கள்.*

*இது தெரியாமல் காரியவாசம் தன்னறிக்கையில் "75 விழுக்காட்டினரான நாங்கள்தான் இந்திய வம்சாவளி. 12 விழுக்காடுள்ள தமிழர்கள்பற்றிக் கவலைப்படத் தேவையில்லை" என்கிறார். அதற்காகத் தமிழில் பாலியும், சமற்கிருதமும் கலந்து தோன்றிய மொழிதான் சிங்களம் என்ற உண்மையை மறைக்கிறார். இந்தி, வங்காளி, ஒரியா ஆகியவற்றுடன் தொடர்புடைய இந்தோ - ஆரிய மொழியான சமற்கிருதத்தைச் சிங்களர்களால் பேசவும் எழுதவும் முடியும் என்று புளுகுகிறார். ஆங்கிலம் பேசுவோரெல்லாம் ஆங்கிலேயர்கள் ஆகிவிடுவார்களா என்ன?*

## சித்திரைப் புத்தாண்டு

*தெலுங்கிற்கும் கன்னடத்திற்கும் 'யுகாதி' என்றும் ஒரே ஆண்டுப் பிறப்புள்ளதுபோல தமிழுக்கும் சிங்களத்துக்கும் ஆண்டுப் பிறப்பு ஒன்றாக இருப்பதே இதை மறுக்கும். உள்ளபடி இத் துணைக் கண்டத்தில் உள்ள அத்தனை மொழிகளும், ஏற்கெனவே அங்கு வழங்கிவந்த தமிழைச் சமற்கிருதத்தைக் கலந்து புதிய மொழிகளாக உருவாக்கப்பட்டவையே. அத் திரிபுக் காலத்தைத்தான் இன்று அம் மொழிகளின் புத்தாண்டாகக் கொண்டாடுகிறார்கள். தமிழிலும்கூட அச் சமற்கிருதத் திரிப்பின்போது உண்டானதே சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டு. ஆம்; தமிழின் திரிப்பும், சிங்களப் பிறப்பும் ஒன்றாக இருக்கவே சித்திரைப் புத்தாண்டு தமிழுக்கும் சிங்களத்திற்கும் ஒன்றாகி விட்டிருக்கிறது.*

## இலாலா தேசம்

*"சிங்கள மக்கள் ஒடிசா, வங்கம் ஆகியவற்றைப் தாயகமாகக் கொண்டவர்கள்" எனக் காரியவாசம் எதை வைத்துச் சொல்கிறார் என்று தெரியவில்லை. ஏனென்றால் 'மகாவம்சம்' சிங்களரின் தாயகம் என்று காட்டும் 'இலாலா தேசம்' வட இந்தியாவில் எங்கிருந்தது என்று சொல்ல வில்லை. ஒருவேளை இன்றைய நேபாளத்தில்கூட இருந்திருக்கலாம். அப்படியிருக்க, குறிப்பாக வங்காளத்தையும், ஒடிசாவையும் சுட்டுவது ஏன்? வங்காளிகளுக்கு ஒரு விடுதலை பெற்ற நாடிருக்கிறது. ஒடிசா பண்டைய கலிங்க நாடு என்று அவர்களை உசுப்பேற்றுவதற்குத்தான்.*

## குட்டை எப்படிக் குரை கடலாகும்?

*ஆம்; தமிழர் கலிங்கத்தை வெற்றிகொண்டதால், 'கலிங்கத்துப் பரணி' எனத் தமிழில் ஒரு இலக்கியமே இருப்பதால், நாங்கள் இந்தியாவிலிருந்தபோதே தமிழர்கள், எங்களுக்குப் பகைவர்கள் என்று காட்டுவதற்குத்தான் அந்தப் புளுகு.*

*சரி; விசயன் தலைமையில் இலாலா தேசத்திலிருந்து சென்ற ஒரு சிறு கூட்டம் இன்று 75 விழுக்காடாக எப்படி ஆகியிருக்க முடியும்? அப்படி ஆவதென்றால் இந்தியாவும் ஆங்கில நாடாகியிருக்க வேண்டுமே !*

## ஒரே தமிழரசி...

*மகாவம்சமே இதற்கு விடை பகர்கிறது. தீவு முழுவதையும் அப்போது ஆண்டுவந்த 'குவைனீ' என்ற அரசிதான் விசயன் கூட்டத்திற்குப் புகலிடம் அளித்தாள். விசயனோ, அவளைக் காதலிப்பதுபோல் நடித்து, அவளைக் கொன்றுவிட்டு அரசேறுகிறான்.*

*ஆனால், அயலவனான அவனை மக்கள் ஏற்கவில்லை. எதிர்க்கிறார்கள். பின்னர் அவன், பாண்டிய நாடு சென்று, அரச குலத்தில்*

திருமணம் செய்து கொண்டு வந்தபின்பே அவனை ஏற்கிறார்கள். காரணம் அப்போது இலங்கை மக்கள் அனைவரும் தமிழர்களாக இருந்ததுதான்.

## இலங்கையே ஒரு தமிழ்நாடு

இல்லையென்றால் அவன் கலிங்க தேசம் சென்று திருமணம் செய்து கொண்டிருப்பான். ஆனால், மக்கள் ஏற்கமாட்டார்கள். அதனால்தான் தமிழ் அரச மரபிலிருந்து பெண்ணெடுத்ததன் மூலம் அவர்களை ஏமாற்றியுள்ளான் என்பதை மகாவம்சம் புலப்படுத்துகிறது. அப்படி, விசயன் தலைமையில் ஒரு சிங்கள அரசு தோன்றியிருப்பினும், புத்த மதத்தின் மூலம் சிங்களத் தேசிய இனம் கட்டப்பட்டிருப்பினும், ஐரோப்பியர் இலங்கையைக் கைப்பற்றுகிற காலத்திலும் அது தமிழர்களை மிகுதியாகக் கொண்ட நாடாகவே இருந்து வந்திருக்கிறது.

## மூன்று அரசாட்சிகள்

அக்காலத்தில் இலங்கை என்பது யாழ்ப்பாண அரசாட்சி, கோட்டை அரசாட்சி, கண்டி அரசாட்சி என்று மூன்று அரசாட்சிகளைக் கொண்டதாகவும், அவற்றில் யாழ்ப்பாணமும் கோட்டையும் தமிழர் ஆளுமைக்குக் கீழிருக்க, கண்டியோ தமிழர்கள், சிங்களர்கள் மாறிமாறி ஆளக்கூடியதாகவே இருந்திருக்கிறது.

இங்கே ஒன்றைக் கவனிக்கவேண்டும். வெளிநாட்டுப் படையெடுப்புகள் அனைத்தையும் தனித்தமிழ் அரசாட்சியான யாழ்ப்பாணமே எதிர்கொண்டிருக்கிறது. ஐரோப்பியரில் முதலில் படையெடுத்த போர்த்துக்கீசியர் யாழ்ப்பாணத் தமிழ் மன்னன் சங்கிலியனை, இந்தியாவில் அன்று தங்கள் ஆட்சியின் கீழிருந்த கோவாவில் தூக்கிலிட்டதும், கண்டியை கடைசியாகக் கைப்பற்றிய ஆங்கிலேயர்கள் அப்போது கண்டி மன்னனாய் இருந்த தமிழ்நாட்டானாகிய இராசசிம்மனை வேலூரில் சிறை வைத்ததும் இதைப் புலப்படுத்தும்.

## கண்டியும் தமிழாளுமையும்

இப்படி இலங்கையை கைப்பற்றிய போர்த்துக்கீசியர், உடச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்களால் தண்டிக்கப்பட்ட சிங்கள மன்னன் யாராவது உண்டா என்றால் இல்லை. அது மட்டுமல்ல, போர்த்துக்கீசியர்கள், உடச்சுக்காரர்கள் ஆண்டவரை இலங்கையில் தமிழ்ப் பகுதிகளும் சிங்களப் பகுதிகளும் தனித்தனியாகவே இருந்திருக்கின்றன. ஆங்கிலேயர்தான் இலங்கை முழுவதையும் ஒரே ஆட்சியின் கீழ்க் கொண்டுவந்தனர். அவர்களும் அதற்கான அதிகாரத்தைக் கடைசிக் கண்டித் தமிழ் மன்னனிடமிருந்தே பெற்றனர்.

அந்த ஆவணம்கூட இன்னும் கண்டி தலதா மாளிகையில் இருக்கிறது. அதில் 'இராசசிம்மன் ஆகிய கண்ணுச்சாமி' என்று கண்டி மன்னன் தமிழில்தான் கையொப்பமிட்டுள்ளான். அது மட்டுமின்றி அவனிடம் அமைச்சர்களாக இருந்த சிங்களவர்களும் தமிழில்தான் கையொப்ப மிட்டுள்ளனர். அப்படியாயின் அக்கடைசிக் கண்டி அரசாட்சியின் ஆட்சிமொழி தமிழாகவே இருந்திருக்கிறது.

## ஆங்கிலேயரின் பொறாமை

யாழ்ப்பாணத் தமிழர்கள் ஆங்கிலக் கல்வி மூலம் இலங்கையின் அரசுப் பணிகள் அனைத்திலும் கொடிகட்டிப் பறந்ததாலும், சுந்தரலிங்கம் என்ற ஒரு தமிழர் இங்கிலாந்து அரசிக்கே ஆங்கில இலக்கணப் பாடம் நடத்துபவராக உயர்ந்ததும் ஆங்கிலேயர்களுக்கு தமிழர்கள் மீது பொறாமையை ஏற்படுத்தியது. இதனால் அவர்கள் சிங்களரைக் கைதூக்கிவிடத் தொடங்கினர்.

மேலும், பொன்.அருணாசலம் என்கிற தமிழர் தலைமையிலிருந்த 'இலங்கைத் தேசிய காங்கிரசு' என்ற அமைப்பே, இந்தியத் தேசிய காங்கிரசைப் பின்பற்றி முதன்முதலில் 'வெள்ளையனே வெளியேறு; இலங்கைக்கு விடுதலை கொடு' என்று குரல் கொடுத்ததால், வஞ்சம் வைத்து, தாங்கள் வெளியேறுகிறபோது, அதிகாரம் தமிழர் கைக்குக் கிடைத்துவிடாதபடி வெள்ளையர் எல்லாம் செய்தனர். அதிலும் இலங்கையின் தலைமை ஆளுநராக இருந்த 'கொல்புரூக்கு' என்பார் ஒரு சிங்களரைப்போலவே செயல்பட்டார்.

## இந்தியத் தேசிய காங்கிரசு செய்த இடக்கு

பற்றும் பற்றாததற்கு இந்தியாவில் விடுதலைப் போராட்டத்தை நடத்திய காங்கிரசும் யாழ்ப்பாணத் தமிழர்பால் பொறாமை யுடனேயே நடந்து கொண்டது. 'இந்தியத் தலைமுறையினர்' என்று அழைக்கப்படும் மலையகத் தமிழரை 'இலங்கை இந்தியர் காங்கிரசு' என்ற தனியமைப்பாக்கி, வடஇந்தியர்களையே அதற்குத் தலைவர்களுமாக்கி, இலங்கையில் தமிழினம் ஒன்றுபடாமலிருப்பதற்கு எதையெல்லாம் செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்தது.

ஆனால், இந்தியா 1947-லேயே விடுதலையடைந்தும், 1948இல் விடுதலையடைந்த இலங்கையின் சிங்களராட்சியால் அந்த இந்தியத் தலைமுறையினரின் குடியுரிமை - வாக்குரிமை பறிக்கப்பட்டபோது அதைத் தடுக்க எதுவுமே செய்யவில்லை. அதற்கு முன்பே அவர்களை இலங்கைக் குடியினராகப் பதியவிடாமல் செய்து, அது தனிச் சிங்கள நாடாவதற்கு உதவியும் புரிந்தது.

## இந்தியாவின் இரண்டகம்

*எத்தனைச் சதிசெய்தும் 1960கள்வரை அன்றளவில் இலங்கையில் தமிழரும் சிங்களரும் சம அளவினராகவே இருந்தனர். சிங்களர் தொகை படிப்படியாக உயர்ந்து 75 விழுக்காடு ஆகவும், தமிழர் தொகை படிப்படியாகக் குறைந்து 12 விழுக்காடு ஆகவும் ஊக்குவித்து, உதவியது இந்தியாவே. கடைசியாகத், தமிழரின் தாயக விடுதலைப் போராளிகளையே 'பயங்கரவாதி'களாகப் புனைந்து, இனப்படுகொலை மூலம் அவர்களை அழிக்கத் துணைபோனது இந்தியாவே என்பதைச் சொல்லத் தேவையில்லை.*

## கமுக்கத்தை உடைத்தார் காரியவாசம்

*இதைத்தான் காரியவாசம் "இந்தியா சிங்களரின் பாதுகாப்புக்காகவும், அவர்களின் உரிமைக்காகவும் கவலைப்பட வேண்டுமேயொழிய தமிழர்களைப் பற்றியல்ல" என்று போட்டு உடைத்திருக்கின்றார்.*

*இதன் உடனடி விளைவாக 2013 ஏப்ரல் 8 மற்றும் 12இல் இந்திய வணிக மற்றும் தொழில்துறைக் கூட்டமைப்பு (FICCI) சார்பில் இலங்கைக்கு ஒரு நாடாளுமன்றக் குழு சென்று வந்தது. அதில் ஒருவர்கூடத் தமிழர் இல்லை.*

## சொல்லாமல் சொல்லும் சேதி

*இக் குழு கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் சென்றது என்றும், அரசியல் பேச்சு நடத்தியதென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. தமிழர் சிக்கலைப் பேசச்செல்லும் ஓர் இந்தியக் குழுவில் தமிழரே இல்லையென்றால், என்ன பொருள்? தமிழர்கள் இந்தியரன்று என்பதுதானே?*

*இது சிங்களர் நலம்தான் இந்தியாவுக்கு முதன்மையானது என்பதைச் சொல்லாமல் சொல்வதன்றோ?*

## சிந்திக்க வேண்டிய செய்தி

*இன்னும் 'நாம் இந்தியர்' என்னும் தமிழர்கள் முந்திச்சிந்திக்க வேண்டிய செய்தி இது. உலகச் சந்தி சிரிப்பதற்குமுன் நாம் விழித்துக்கொள்ளவேண்டும்.*

**"ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே**
**கெட்டான் எனப்படுதல் நன்று"** - *தமிழ்மறை*

*(தன்னை வேற்றானாகக் கருதி ஒட்டார்பின் சென்று ஒருவன் உயிர் வாழ்வதைவிட, தனது நிலையிலே உறுதியாக நின்று இறந்தான் எனப்படுதல் நன்று.)*

# பாவலரேறு ஐயாவின் 80ஆம் ஆண்டு விழா
# கனிச்சாறு நூல் வெளியீட்டு விழாப் பாட்டரங்கம்

**இடம் : இலயோலா கல்லூரி - கல்வியியல் அரங்கம், சென்னை**

**நாள் : தி.பி.2044, கும்பம் : 19 (03.03.2013)**

**தலைப்பு : தமிழர் தோளெழுந்தால்... தலைமை : பாவலர் பரணன் அவர்கள்**

**பாவலர் ப.எழில்வாணன்.**

## தமிழ் வாழ்த்து

எக்கேடு வந்தாலும் எரிமலைகள் சூழ்ந்தாலும்
முட்காடாய் மாறாமல் பூக்காடாய் மணக்கின்ற
முத்தமிழே ! முக்கனியே ! முதன்மொழியே ! நற்றமிழே !
எத்திக்கும் புகழ்பரப்பி முத்திரையைப் பதித்தவளே !
தடியூன்றி நடக்காமல் தலைநரைத்துப் போகாமல்
அடிதவறி வீழாமல் அழகுநடை குன்றாமல்
இளமையுடன் இருப்பவளே ! பழம்பெருமை கொண்டவளே !
வளமையெலாம் பெற்றவளே ! கலைவிதைத்து வளர்த்தவளே !
மடிதவழ்ந்து மூவேந்தர் மார்பினிலே வளர்ந்தவளே !
இடிவந்து வீழ்ந்தாலும் இளைக்காத இளந்தமிழே !
வாழியவே வண்டமிழே ! வையமெலாம் செழிப்புறவே !
ஊழிபல அரசாள்வாய் ! வாழியவே செந்தமிழே !

*ஐயாவின் அரும்புகழ் வாழ்க ! - தாமரை*
*அம்மாவின் பெரும்புகழ் வாழ்க !*
*ஐயா இறைக் குருவர்புகழ் வாழ்க ! - இவர்கள்*
*அருளொலி நமையெலாம் ஆள்க !*

பாட்டரங்கின் தலைமை; பகைப் பூட்டறுக்கும் பரணர்க்கும்
கூட்டரங்கில் உடன்பாடும் சாட்டையடிப் பாவலர்க்கும்
நாட்டமுடன் கேட்கவந்த ஆட்டமிலா அவையோர்க்கும்
வேட்டதிர்வைத் தோற்கடிக்கும் பாட்டரங்கில் என்வணக்கம் !

பாட்டரங்கில் கேட்குமுன்னே சிலருக்குத் தூக்கம் !
கேட்பதற்குச் சுவையுண்டோ எனச்சிலர்க்கோ ஏக்கம் !
நிறைவுடனே பாடிடலாம் என்றெனக்கே ஊக்கம் !
நிறைவேறு மாநோக்கம் ! முயற்சிநிறை வாக்கும் !

தமிழர்தோள் எழுந்தாலோ தரைகு லுங்கும் !
 தணல்பறக்கும் “இராசபட்சே” கொழுப்ப டங்கும் !
தமிழர்தம் சினமூச்சால் கடல்நீர் வற்றும் !
 தரைவழிஉண் டாகும்இலங் கைதுண் டாகும் !

தமிழர்கால் அழுத்தம்இலங் கையைநொ றுக்கும்!
　　தாங்கிடுமோ சிங்களர்சுண் டைக்காய் நாடு!
தமிழ்த்தீயால் சுடுகாடு! முடிந்தால் ஓடு!
　　தமிழ்ப்பகையே, நொறுங்கும்பார் எலும்புக் கூடு!

எழவில்லை தமிழர்தோள்! அதுதான் தொல்லை!
　　ஏமாளி என்பதற்கும் உண்டோர் எல்லை!
எழவில்லை தன்மானம் உணர்வும் இல்லை!
　　எரியீட்டி ஏன்நெருப்பை ஏந்த வில்லை!
அழவில்லை ஓரிலக்கம் கொலையைக் கண்டும்!
　　அரக்கர்களோ தமிழ்நாட்டில் தமிழர் என்போர்!
'அழிவில்லை நமக்கிங்கே' என்று சொன்னால்
　　அவர்நாக்கு பிண்ணாக்கு! புண்ணாய் ஆக்கு!

தோளெழுந்து நின்றிருந்தால் தமிழர் ஆட்சி
　　தொடர்ந்திருக்கும்! தமிழீழம் மலர்ந்தி ருக்கும்!
வாலெழுந்தே ஆடியதால் வஞ்சர் கூட்டம்
　　வாயூட்டு கையூட்டு சலுகை காட்டி
மேலெழுந்து தமிழர்களை அடிமை ஆக்கி
　　மெல்லமெல்லத் தமிழுணர்வை நாளும் நீக்கிக்
காலொடிந்த கழுதையென வீழச் செய்தார்!
　　கண்திறக்க மறுக்கின்றான் தமிழன் இன்றோ!

கடலெழுந்தால் கரைதாண்டும்! அழிவு நேரும்!
　　கனலெழுந்தால் பொருள்யாவும் வெந்து போகும்!
மடமெழுந்தால் இருளாகும்! அறிவு நீங்கும்!
　　மடியெழுந்தால் மிடிவாழும்! உழைப்பு தூங்கும்!
இடரெழுந்தால் இடியாகும்! இன்னல் ஓங்கும்!
　　இகலெழுந்தால் கொடிதாகும்! உயிரை வாங்கும்!
அடர்தமிழர் தோளெழுந்தால் அடிமை வீழும்!
　　அஞ்சாமை பேராண்மை உலகை ஆளும்!

ஆரியமோ அடிபட்ட பாம்பு! தாமே
　　அடங்கியதாய் நினைப்பதுவோ தீங்கு! நாளும்
வீரியமாய் வினைபுரிதல் நமக்கு வாழ்வு!
　　விளையாட்டாய் வாழ்வதுவோ என்றும் வீழ்வு!
ஆரியர்கள் பூனைகள்தாம்! என்ற போதும்
　　பொல்லாங்கு செய்வதிலோ புலிகள் போல்வர்!
நேரியநம் சிந்தனைகள் கணைகள்! ஏவ
　　நேரிட்டால் வெடிக்கும்பார் எரிம லைகள்!

எங்கெங்கே வன்கொடுமை கற்பழிப்பு படுகொலைகள் இருளாய்ச் சூழ்ந்த
வெங்கொடுமை விளைத்திடுமோ பொதுநலத்தை வீழ்த்திடுமோ விரைந்து கூடி
அங்கங்கே செந்தமிழர் அருந்தோள்கள் அதிர்ந்தெழுந்தால் அன்ன யாவும்
வெங்களிற்றின் கால்பட்டு வெகுண்டோடும் சிறுநரிபோல் ! வீழ்ந்து போகும் !

நடக்கின்ற நிகழ்காலம் நமக்கிங்கே இருட்காலம் ! வரும்நற் காலம் !
உடன்பட்ட எதிர்காலம் உருவாகும் ! ஒண்டமிழர் உயரும் காலம் !
கிடக்கின்ற துயர்கோடி ! கிளர்ந்தெழுந்தால் இளைஞர்கள் கண்முன் தூள்தூள் !
வடிக்கின்ற கண்ணீரால் வீரமென்னும் பயிர்விளையும் ! வயிரம் தோள்தோள் !

பனிரெண்டு கோடியுள தமிழினத்தின் தோளெழுந்தால் இலங்கை எங்கே ?
அணிதிரண்டே ஆர்த்தெழுந்தால் ஈழம்தான் மலராதோ ? முழங்கு சங்கே !
துணிந்ததுகாண் இவ்வுலகம் ! "இராசபட்சே"வுக்குண்டு தூக்கு மேடை !
இனியெவனும் தப்பிக்க முடியாது ! கட்டிவிட்டோம் இறுதிப் பாடை !

உயிர்கருதா உயர்தமிழர் தோளெழுந்தால் வெடிகுண்டும் ஒருநூற் கண்டே !
பயிர்விளைக்க மதுபாய்ச்சும் பாவிகளால் பயனுண்டோ ? பழைய துண்டே !
கயிறென்று கண்மூடி மயிரிழுத்தால் அவர்தலையில் களிமண் உண்டே !
செயலென்றால் தமிழ்த்தொண்டே ! செந்தமிழர் செய்துவந்தால் செயல்கற் கண்டே !

அன்றொருநாள் சோழமன்னன் தோளெழுந்தான் கல்லணையைக் கட்டி வைத்தான் !
இன்றிளைஞர் தோளெழுந்தால் சிங்களர்க்குக் கல்லறைகள் கட்டி வைப்பார் !
அன்றையநாள் பாண்டியனும் தோளெழுந்தான் ஆரியரை ஆட்டி வைத்தான் !
இன்றிளைஞர் தோளெழுந்தால் மன்மோகன் சோனிகளைப் பூட்டி வைப்பார் !

தமிழர்தோள் எழுந்தால்தான் தடையுடைத்துச் சென்றிடலாம் ! தமிழர் வாழத்
தமிழியத்தைக் காத்திடலாம் ! தமிழ்ப்பகையை வென்றிடலாம் ! தாழ்வை நீக்கித்
தமிழ்வளர்க்கும் தேசியத்தைத் தமிழர்நாம் போற்றிடலாம் ! தாயின் மேலாய் !
தமிழ்நாடு தமிழர்வாழ் தனிநாடாய்த் தழைத்திடுமே ! தமிழே ஆளும் !

உலகெங்கும் வாழ்தமிழர் உரிமைகளைக் காத்திடலாம் ! ஒருசொல் சொன்னால்
கலகங்கள் அடங்கிவிடும் ! கண்சிவந்தால் மண்வெடிக்கும் ! கதைமு டிக்கும் !
அலைபொங்கும் இந்தியத்தென் கடலும்நம் சொல்கேட்கும் ! அவலம் போக்கும் !
தொலைவில்லை தமிழீழம் ! தொய்வில்லை ! தமிழ்வீரம் ! துணிவே ஊக்கம் !

தோளெழுவோம் ! தமிழரெலாம் திரண்டெழுவோம் ! தூங்காமை துணிவு கொள்வோம் !
நாளெழுதும் வரலாற்றில் நமக்குள்ளே ஒற்றுமையை நடவு செய்வோம் !
கோளெழுதும் ஊழ்வினையைக் கூறுசெய்வோம் உழைப்பாலே ! கொள்கை வெல்வோம் !
வாளெடுத்தால் வெற்றியென்றும், வல்லவர்கள் நாமென்றும் வரைவு செய்வோம் !

சின்னஞ் சிறுவன் "பாலச் சந்திரன்"
பொன்னுடல் சிதைத்தான் இன்னுயிர் பறித்தான்
பேடிக் கிறுக்கன் "இராச பட்சே"

மூடி மறைத்தான் முடிந்ததா அவனால் !
என்னடா கொடுமை ? மண்ணினித் தூங்குமா ?
என்னெனச் சொல்லினும் இழந்தது இழந்ததே !
கண்ணீர் வடித்தால் கடமை முடியுமோ !
செந்நீர் சிந்தியும் ஈழம் அடைவோம் !
அந்நாள் வரும்வரை நமக்கோ
எந்நாளும் புண்ணாளே ! பொறுத்தி ருப்போம் !

வேழத்தைப் போல நாமும் வீரமுடன் இறத்தல் வேண்டும் !
ஈழத்தில் பிறந்து மீண்டும் எரிகணையாய்ப் பாய்தல் வேண்டும் !
ஈழத்தாய் வாழ்வ தற்கே இன்னுயிர்பல் கோடி உள்ளோம் !
வாழத்தான் பிறந்தோம் ஆயின், வாழ்வெதற்கோ ஈழம் இன்றி !

என்னருமைத் தமிழர்காள் ! இந்நொடியே தோளெழுவோம் ! இணைந்து நிற்போம் !
இன்னல்களை எழும்தடையை இரண்டகத்தை எரித்திடவே முனைந்து நிற்போம் !
புன்னுளத்தார் பொய்ப்புனைவைப் போர்க்குணத்தைப் பூட்டறுப்போம் ! உரிமை மீட்போம் !
என்னவிலை என்றாலும் இன்னுயிரைத் தந்தேனும் இனத்தைக் காப்போம் !

எழுச்சி விதையாய் விழுவோம் !
விழிப்பு நாற்றாய் எழுவோம் !
முடிக்கும் செயலை முடிப்போம் !
வெடிக்க நினைத்தால் வெடிப்போம் !

**- தழல் தேன்மொழி -**

பாட்டரங்கத் தலைமையேற்கும் பண்பறிவும் அன்புமார்ந்த
பரணர்ஐயா !பாவலரே றய்யாவை அகம்பதித்து
நாட்டரங்கப் பாவலராய் நன்மதிப்பைப் பெற்றவர்நீர்
நல்வணக்கம் ! நான்பாட, நல்வாழ்த்தை நல்கிடுவீர் !

அருந்தமிழ்த்தாய் ஈன்றெடுத்த அருங்கொள்கைத் தென்மொழியீர் !
ஆர்க்கின்ற தமிழிளைஞர் ! அகம் உயர்த்தும் நற்பெண்டீர் ! உணர்வணக்கம் !
பெருமையுறு தமிழரிமா, பீடுநிறை போராளி,
நீடுபெருஞ் சித்திரனார் நிலைத்தபுகழ் நெஞ்சிறுத்தி,
அருந்தவத்தாய் தாமரையார் அகம்வணங்கி, அருள்மனத்து
இறைக்குருவர் எதிர்கொண்ட கனிச்சாறு வெளியீட்டுப்
பெருமைவிழா ! பீடுறவே நடந்தேற்றிப் பெருமக்கள்
உயிருணர்வில் உயர்கொள்கை ஏந்திச்செல்லும் ஏற்றவிழா !
உருப்படுத்தும் தமிழியத்தை ; ஒருப்படுத்தும் தமிழினத்தை ;
உலகமெங்கும் தமிழ்மொழியை, ஒளிப்படுத்துங் கொள்கைவிழா !

எண்பத்து ஆண்டுவிழா ; எந்தமிழர் பாவலரே றெழுதிச்சென்ற
பாடல்களை, ஏற்றமுடன் இலக்குரைத்த உரைகளையும் எண்ணும்விழா !

திண்மைமிகு படைப்புகளை இளைஞரெல்லாம் தெருவெங்கும், வீடெங்கும்
பரப்புதலை, புகுத்தலை வாழ்த்துரைக்க ஏற்றவிழா ; இனியவிழா !
ஒண்மையுறும் தமிழகத்தை, உருவாக்கும் விடுதலையைத் தமிழினத்தீர் !
ஓர்வோமே ! உரிமையுடன் உயிர்வரிகள் ஒவ்வொன்றாய் செயலிற்கு
எண்ணியெண்ணி ஏற்றமுடன் இயங்கிடுவோம் ! எந்தமிழர் வீழ்ந்திடாமல்
இருத்தற்கே எரிதழலாய், ஒன்றிணைவோம் சமர்க்களத்தில், உருப்படுவோம் !

பாவலரேறு தலைமையேற்ற பாட்டரங்கம் அறிந்திருப்பீர் !
பாக்கள்வரி ஒவ்வொன்றும் தமிழ்மொழியை, இனம், நாட்டை
மேவலுற மீட்பதற்கே, மெய்வழியை, மேந்தமிழக் கொள்கையுடன்
தீட்டுகின்ற திட்டங்கள் குருதியினைச் சுடேற்றும் !
மாவலிவை மனத்தேற்றம் ; மறப்போமா தென்மொழியின்
மறவரெல்லாம் ; எங்கெங்கே சென்றாலும் கொள்கையராய்
தூவுகின்ற துலக்குமிகு நற்கருத்து விதைகளெல்லாம்
விளைந்தபெரும் செயல்களெல்லாம் கனிச்சாற்றின் விளைவேயன்றோ !

சாட்டையடிப் பாவரிகள், சாதியென்னும் சாய்க்கடைக்குள்
சவலையென சுருண்டிருக்கும் சழக்கருக்கு மண்டையிடிப் பாக்கள் ;
வேட்டகத்தை எடுக்காமல், விழியினிலே சூடேற்றி
வீணர்களைச் சுட்டெரிக்கும் தழல் வீச்சுகள் !
கோட்டைபுகும் குறும்பர்களின் கொட்டத்தைக் குடைந்தெதிர்க்கும்
குமுகநலத் துமுக்கிகள் ; கனிச்சாற்றின் குழைவூற்றி,
நோட்டமிட்டு, இரண்டகரின் செயல்நொறுக்கும் நுண்குண்டுக் குளிகைகள் !
நொந்தவர்க்கு வலிவூட்டி விடுதலைக்கே வழிகாட்டும் கொள்கைநெறிகள் !

அமிழ்தான செந்தமிழீர் ! ஆர்ப்பரிப்பு, அமைதிப்போர்,
உண்ணாநிலை, உணர்வுநிலைப் போராட்டம் இவையனைத்தும்
இமியளவும் இரண்டகரை, இனப்பகைமை இழிவுகளை
இத்தமிழச் சறுக்கல்களை, எளியோரை, வாழ்வினின்றுத்
துமிக்கின்ற துயர்நிலையை – தொல்லைகளைத் தூர்த்திடவே
இயன்றிடுமோ ? எழுச்சியுடன் இரும்புமன உறுதியுடன்
தமிழர்நாம் தோளெழுந்தே இந்தியத்தைப் பூட்டறுத்தால்
தனிமானத் தமிழகத்தை மீட்டிடலாம் மீவிரைவில் !

இந்தியத்தைப் புறந்தள்ளி, இழிமனுவை வேரறுத்தால்,
பொந்திகையாய்ப் பூணூல்கள் புதுக்குகின்ற புரட்டுமிகு
ஆணைகளை எரித்திட்டால், சாதீயை அரவணைத்து
சாணிக்குள் நெளிகின்ற புழுக்களென்னும் சழக்கர்களின்
மானமற்ற திட்டங்களை மண்மூடி அழித்திட்டால்,
கோணல்களை நேர்ப்படுத்தக் கொள்கையுறு நற்றமிழர்
தோளெழுந்தால், துவண்டிருக்கும் செந்தமிழர் செருக்களத்தில்
வாளெடுத்து உட்புகுந்தால் வழியிலையோ விடுதலைக்கே !

இந்தியத்தைப் பூட்டறுத்து, எந்தமிழர் தேசியத்தை
மீட்பதற்கே எத்தனைநாள் போராட்டம் ? எதுவரைநாம்
முந்தையநம் பண்பாட்டின் முதலிழப்போம் ; மூடர்களாய்ப்
பகுத்தறியும் உணர்விழப்போம் ? சாதியினைக் கழற்றியெறி
நொந்தரவாய்க் கூறியநம் பாவலரேறின் பாவரியை
நினைந்திடாமல் சாய்க்கடையாம் சாதியிலே குளித்திடுவோம் !
சொந்தமென்றே நம்தமிழச் சுற்றங்களைச் சூழாமல்
சுள்ளென்று கருக்குகின்ற சாதீயை அரவணைப்போம் !
எந்தமிழர் தமிழ்மீட்பார், தமிழினத்தை, தமிழ்நாட்டைத்
தவறவிடார், என்றெல்லாம் முழுவாய்வும் ஈகித்த
நந்தமிழ்த் தேசியத்தின் தந்தைபெருஞ் சித்திரனார்
கனவெல்லாம் கருக்குகிறோம் ! காலம்எல்லாம் சென்றதுவே !
வெந்துளந்தான் நொய்கின்றோம் ! வேரறுத்து நம்பகைவர்
களிக்கையிலே, வீண்பேச்சு, வெறும்பேச்சில் வீழ்வதுவோ ?

கூட்டுணர்வு இல்லாத கொள்கையற்ற தமிழர்கட்குப்
பாட்டரங்கம் விளைக்கின்ற விளைவென்ன ? எந்தமிழர்
நாட்டுணர்வில், நலம்விளைக்கும் இனவுணர்வில், மொழியுணர்வில்
வேட்கையுறும் நாள்என்று ? வேட்பதெல்லாம் நல்ஏந்தாய்
வீட்டினையே கட்டுதற்கு எண்ணுவதும், விழிகுளிர
ஈட்டுகின்ற செல்வத்தை எந்தெந்த வைப்பகத்தில்
போட்டிடலாம், பொறுப்புள்ள தலைவரென்று குடும்பத்தார்
நாட்டமுடன் கூறுகின்ற நல்சொல்லே போதுமென்று
தீட்டுகின்ற திட்டமின்றி வேறென்ன ? சிறுவட்டக்
கோட்டுக்குள் வாழ்வெண்ணம் குறித்து வைப்பார்
வாட்டுகின்ற வறுமையினுள் வாழுகின்ற மக்களுக்கே
ஈட்டுகின்ற செல்வத்துள் இமியேனும் ஈதற்கே
எண்ணுவரோ ? எந்தமிழீர் ! எங்கேநம் பாவலரே
றெழுதிவைத்த பாடல்களைப் படித்தோமா ? பயனென்ன ?
உண்ணுவதைத் தான்மறைத்து உடை, அணிகள் உறையுளையும்
ஒளிப்பதற்கே எண்ணிடுவோம் ! உருக்குலைந்தே உறையுளின்றி
திண்ணையினில் ஒதுங்கிடவும் வெருட்டுகின்ற தீயரிடை
திரைகட்டிச் சாலையினில் தெருவொதுங்கி வாழ்கின்ற
நன்குண்ணும் நாயினிலும் கீழாக நைகின்ற
நம்மக்கள் நலமெண்ணும் நன்மக்கள் எவருள்ளார் ?
கண்ணிருந்தும் குருடர்களாய்க் காதிருந்தும் செவிடர்களாய்
கலைகளென்ற பெயராலே களித்தாட்டம் போட்டிடுவோர் ;
மண்மூளை மாக்களன்றோ மக்களென்ற பெயராலே
மதியிழந்து தமிழ்மரபின் மாண்பிழந்து ஆடுகின்றார் !

நுண்ணறித் தமிழர்நாம் நோக்குவதன் றியென்செய்தோம் ?
எதிர்த்திடவும் முயன்றோமோ ? இனப்பகையை அழித்தல்முன்
நண்ணியநம் இரண்டகரை இடித்துரைப்போம் ; நாணமில்லா
அவர் ஆட்டம் முடித்தற்கே முயன்றிடுவோம் மூளையுடன் !

மாந்த நேயமற்ற மக்கள் நாயகம்
மக்களைத் தூக்கிலேற்றும் குடியரசுத் தலைமை
வேந்தராய் நாடுவிற்கும் மண்மோக நரிசிங்கர்
வீட்டிற்கே கொள்ளிவைக்கும் விழல் சிதம்பரங்கள் ;
ஏந்திய கால்களில் நெய்பூசும் சாமிகள் ;
இடைத்தூது செல்கின்ற இரண்டக வீடணர்கள் ;
மாந்திய அடிமை மயக்குறு கள்ளால்
மானம் இழந்தே தூங்கும் தமிழினம் !

இத்தனை நிலைகளும் மாறிட வேண்டுமேல்,
இந்திய பூட்டைநாம் உடைத்திட வேண்டுமேல்,
சொத்தையர் ஆட்சியைச் சுக்கென நொறுக்கவும்
ஆரியர் சூழ்ச்சியை அடியோடு அறுக்கவும்
முத்தமிழ் மொழியுடன் இனத்தையும் நாட்டையும்
மீட்கவும் வேண்டுமேல், மேந்தமிழ் இனத்தினர்
ஒத்த உணர்வராய் ஓங்கிய கொள்கையில்
ஒன்றியே தமிழர் தோளெழுந் துயர்ந்தால்

தூக்குத் தண்டனையைத் தூக்கிப் பிடித்தே
தொடரும் பேராயத் தொல்லையை அழிப்போம் !
ஆக்கம் கெடுக்கும் ஆரியப் பேயரை
அடிமைகள் ஆக்கி ஆழமாய் உணர்த்துவோம் !
தாக்கும் சாதியால் தளர்வுறும், நலிந்தநம்
தமிழரைத் தாங்கியே தூணெனக் காப்போம் !
ஊக்கம், உழைப்பு, உவப்புடன் உண்மையாய்
ஒவ்வொரு நொடியும் கொள்கையில் உயிர்ப்போம் !

தொன்மையுறு தமிழியத்தைத் துலக்கமுறு பண்பாட்டைத்
தொலைத்தகொடும் ஆரியனும், ஆரியத்து அடிமைகளும்
புன்மையுடன் புறந்தந்த பொறுப்பில்லா திரைச்சுருளை,
இருபொருளில் வருகின்ற இழிவுமிகு பாடலுடன்
எந்தமிழர் நலன்பொருட்டு இளைஞர்களே ! எரித்திடுவோம் !
எம்இனிய உறவுகளாம் இசுலாமியத் தமிழர்களை
எந்தமிழர் துணைகூட்டி ஏமாற்றி இழிவுறுத்தும்
புல்லியநல் ஆரியனாம் புகழுற்ற நடிகனைநாம்
எந்தவொரு நிலையினிலும் ஏற்பதற்கு இசையாமல்
ஏமாற்றம் அடையாமல் இனம்காப்போம் தமிழர்களே !

அரசபட்சே என்னும் தமிழினக் கொலைஞன்
    அச்சமே இழந்து அடிக்கடி வருகிறான்,
வரவேற் கின்றன, வன்கொடுமை அரசுகள் !
    வாட்டமே இன்றி ஊட்டமாய்ச் செல்கிறான் !
கரவே இன்றிக் கலங்குதல் அன்றிக்
    கனத்த உளத்துடன் கண்டே விழிக்கிறோம் !
அரசு முத்திரை குத்திய அடிமைகள்நாம் ;
    இரங்குதற் குரிய இளித்த வாயர்நாம் !
உரக்க உரைக்கவும் இயலா ஊமையர்நாம்,
    உயிருக் கஞ்சிடும் உள்மனக் கோழையர்
சொரனை இன்றியே சூம்பிக் கிடக்கிறோம்
    சுட்டுத் தள்ளாமல் ஒடுங்கி நிற்கிறோம் !

குரைத்திடும் நாய்கள்நாம் ; கடித்திட மாட்டோம் !
    கொத்துக் கொத்தாக நம்மவர் இழந்தும்
மரத்த தமிழராய் மானமும் விற்றே
    மயங்கிக் கிடக்கிறோம் ; கலைகளுக்கும் காதலுக்கும் !
உரத்த அடிமைகள் ; உணர்விலா தொழும்பர்கள்
    உட்பகை, அயல்பகை உறுத்தினும் அசையோம் ;
இரையென தீக்கே எம்மவர் கொடுப்போம்
    இமியும் பகைவனை எதிர்த்திட மாட்டோம் ;
நரைத்தன முடிகள் ; கொள்கையில் நரையிலை ;
    நந்தமிழ் மக்கள் இனியேனும் எழுவோம் !
நரம்புகள் முறுகேற, நற்றோள் நிமிர்த்துவோம் !
    நற்றமிழ் நாட்டின் விடுதலை நண்ணுவோம் !
ஆரியப் பொதிகையில் ஆரிய மாமிகள்
    ஐயர், ஐயங்கார் அடிக்கும் கொட்டங்கள் !
பாரிய அளவு ; பகறுதல் கடினம் !
    பார்த்தே அவற்றைக் கருத்தில் கொள்ளுங்கள் !

வித்தூன்றி வித்தூன்றி விளைவேதும் காணாமல்
    வெம்புகின்ற உளத்துடனே விடிவினையும் பாராமல்
எத்தனைநாள் இந்தியத்தை எதிர்நோக்கிக் காத்திருப்போம்
    இயக்கமென்றும் அமைப்பென்றும் நாம்கூட்டி வினையாற்றி
முத்தமிழ்த்தாய்த் திருநாட்டை முழுவுரிமை நாடாக்க
    முதுமையராய், இளையவராய் எத்தனைநாள் கூடிடுவோம்?
ஒத்தமுழு உணர்வினராய் வெல்லுகிறார் நம்பகைவர் ;
    ஒருமையுறும் உணர்விலராய் வெவ்வேறு உணர்வினராய்
எத்தனைநாள் கூடிடினும் வெற்றியிலை ; இனியேனும்
    நம்தமிழர் ஒருமையுடன் தோளெழுவொம் ; தோல்வியில்லை !

இத்தரையை மீட்டுதற்கே இன்றேநாம் முடிவெடுப்போம் !
எள்ளளவும் இயங்குதலில் வேறுபடோம் ; உறுதியேற்போம் !
சொத்தாக ஆயிரத்துப் பாடல்களை நம்ஐயா
சோர்வகற்றத் தந்துள்ளார் ; என்றாலும் நந்தமிழர்
சொத்தையுறு பாடலைத்தான் சுவையுறவே பாடுகின்றார் ;
ஆடுகின்றார் ; தமிழினத்தின் தலைமையரோ அவற்றைத்தான்
மெத்தெனவே ஊக்குகிறார் ; மேன்மையுறு பாட்டினுக்கு
நல்விளைவு எவ்வகையில் நம்மவர்க் கேற்றந்தரும் ;
வித்திடுங்கள் தமிழர்களே ! விளைவுவரும் விளைவுவரும்
என்கின்ற ஐயாவின் ஒருபாடல் உரைத்திடுவேன்
வித்தெனவே பிள்ளைகட்கு விதைத்திடுங்கள் ; விளக்கமுடன்
பயிற்றிடுங்கள் ; பயன்விளையும் ; பண்பாட்டுச் சீர்விளையும் !

**பாவலரேறு ஐயாவின் பாடல்**

வித்திடுக ; வித்திடுக ; வித்திடுக ! தன்னால்
விளைந்துவரும் ; விளைந்துவரும் ; விளைந்துவரும் ஆக்கம் !
எத்திசையில் எத்தரையில் எத்துறையில் நின்னால்
இயன்றிடுமோ அவ்வகையில் முயலுகநீ நன்றே !
வித்துயதன் விளைவெண்ணிக் கவன்றிடுதல் வேண்டா ;
விளைவுசிறி தாமெனிலோ பயனுடனே தோன்றும் !
முத்துவிளை காலமென்ன, கரிவயிர மாகும்
முழுக்காலம் என்னவென்ன நீயரிய மாட்டாய் !

மரமழிந்து நிலம்புதைந்து பழுத்தணுக்கள் கரியாய்
மாறவிரு பத்திலக்கம் ஆண்டுசெலல் வேண்டும் !
உரமிகுந்து கருமையுற்று நிலக்கரியாய் மாறி
உருப்பெறவோ மேலுமிரு பத்திலக்கம் ஆண்டு !
கரிவயிர மாகவிரு பத்திலக்கம் மேலும்
கழிந்திடுதல் வேண்டுமதைக் கனிமயியலார் அறிவார் !
கரிமாறிக் காழகமாய் மாறுதற்கே ஊழி
காத்திருக்க வேண்டுமெனில் உள்ளமென்ன கரியா ?

– தென்மொழிச்செல்வன் **கொழுமம் ஆதி** –

மதிகெட்ட மன்னர்களால் மாண்புமிகு தமிழரிடை
மனுதரும நெறியென்னும் சாதியமும் புகுந்த(து) அன்று ;
மதியிருந்தும் – தன்னலத்தால் தமையிழந்த மாந்தர்களால்
மனுதருமம் புதுப்பிக்கப் படுகிறதே இன்னுமிங்கு !
விதியென்று நமக்குள்ளே வேற்றுமைகள் வளர்த்திட்ட
வீணர்களாம் ஆரியரின் மறுவுருவோ இவர்களிங்கு !
இதுவெல்லாம் ஏய்ப்பென்று இன்தமிழர் உணர்வதென்று ?
நம்ஐயா பெருஞ்சித்திரர் வழியில்நாம் எழுவதென்று ?

சின்னஞ்சிறு பிள்ளைபாலச் சந்திரனின் சிறகொடித்துச்
செங்குருதி மண்ணில்விழக் கொன்றனரே குண்டுதுளைத்து !
என்னடாஇது கோழைச்செயல் ? சிங்களவனின் நரிச்செயல் !
இமியளவும் வீரமில்லா அவன்மீது காறிஉமிழ் !
இன்னுமா தெரியவில்லை இந்தியாவின் கண்களுக்கு... ?
இனவெறியன் அரசபட்சே இழைத்தபெருங் கொடுமையெலாம்
இன்னுமா தெரியவில்லை இந்தியாவின் கண்களுக்கு... ?
இரக்கமிலாக் கயவர்களாம் இவர்களுக்கு வாழ்வெதற்கு... ?

தமிழர்களே தோளெழுவோம் ! தமிழ்ப்பகையை அழித்தொழிக்கத்
தமிழர்களே தோளெழுவோம் ! தமிழினத்தை மீட்டெடுப்போம் !
அமிழாத தமிழ்க்குடியைப் பிளவுறுத்தும் சாதிவெறியை
அடியோடு வீழ்த்திடவும் தமிழொருமை காத்திடவும்,
தமிழ்ஈழப் பகையழிக்கத் தமையீந்த வீரர்வழி
தளராமல் நடையிடவும் தமிழர்களே தோளெழுவோம்... !
தமிழாநாம் எழுவதுதான் பகைவர்க்குச் சாட்டையடி !
தமிழர்தம் தோளெழுந்தால் தாங்கிடுமோ பகைவன்குடி !

– திருக்குறள் புலவர் **நாவை.சிவம்**, மணற்பாறை –

முன்புதைந்த தமிழ்ப்பண்பு நாகரிகம் யாண்டும்
முனைமழுங்கும் தமிழரிடை முளைத்திடவே மீண்டும்
தென்புதந்த தமிழரிமா ! ஆற்றல்போ ராளி !
தேர்ந்தபெருஞ் சித்திரனார் சுடர்பாட்டைக் கேளீர் !
என்மொழியும், என்னினமும், என்நாடும் என்றோ
ஈடேறும் எனவுழைத்த தன்மானக் குன்றாம் !
தென்மொழியைக் கண்ணொளியை உயிர்மூச்சாய்ப் போற்றி
செயல்செய்த ஐயாவின் வழிநடப்போம் ஏற்றி !

தொட்டுநமை வருத்திவந்த ஆரியத்தைச் சாடி
தோளுக்கே உரமூட்ட மறப்பாட்டைப பாடி
முட்டெனவே எதிர்நின்ற பகைக்குன்றை வீழ்த்த
முப்போதும் உணர்வுதந்தார் வீறுரையில் ஆழ்த்தி !
கட்டவிழ்த்த காளையெனக் குமுகாயம் மாற
கடமைசெய வித்திட்டார் பாவலராம் ஏறு !
எட்டுபத்தாம் அகவையிலே இங்குமனம் ஊன்றி
எழுந்துள்ளார் மாற்றுருவில் கனிச்சாறாய்த் தோன்றி !

தண்டமிழர் தோளெழுந்தால் கயமையெலாம் அஞ்சும்
தடமாறும் பேதையெலாம் வழிகேட்டுக் கெஞ்சும்

ஒண்டமிழ்த்தாய் சிலம்படியைத் தொழவருவார் கோடி
ஓ!ஓ!ஓ! எனப்போற்றிக் கூத்திடுவார் நாடி
பண்டிருந்த புகழ்வானில் கோலேச்சி ஆர்க்கும்
பண்ணார்ந்த தமிழிசைதான் இன்பமெலாம் சேர்க்கும்
எண்டிசையும் தமிழ்க்கொடிதான் அசைந்தசைந்தே பறக்கும்
எக்காளம் ஊதிஇளம் படையெல்லாம் சிறக்கும்
தொல்லுலகை ஆண்டவன்நீ செத்ததுவா வீரம் ?
தோல்வியினால் போனதுவா மாந்தமன ஈரம் ?
வல்லடிமைச் சேற்றினிலே வாய்புதைத்தாய் தமிழா !
வயிறொன்றே குறிதானா ? நீயென்ன சிமிழா ?
கொல்லவந்த வெம்புலியைக் குறிவைத்தே கொன்றாய் !
கொன்றழிக்கும் சிங்களத்தான் செயல்பார்த்து நின்றாய் !
வெல்லுதற்கே தோளெழுந்தால் பகையழிந்து போகும் !
வெற்றியினைக் குவித்திடலாம் குன்றுந்தூள் ஆகும் !

அன்னைமொழி யாம்தமிழின் அகவையெலாம் மேனாள்
ஐம்பதினா யிரமாண்டாம் என்பார்பா வாணர்
தென்னவரின் குலவிளக்காம் செம்மொழியைக் கற்பார்
திருக்குறளும் காப்பியமும் தமிழரெலாம் கற்பார் !
பின்னர்வந்த ஆரியமும் இந்தியெலாம் போகும்
பீற்றுகிற ஆங்கிலந்தான் நிலைகுலைந்து போகும் !
மன்னுபுகழ் நாகரிகம் ஓங்கியின்பம் கூட்டும்
மனவுரத்தால் தமிழ்நாடும் விடுதலையை ஈட்டும் !

தமிழ்நாட்டில் முதலமைச்சர் தமிழர்தாம் வருவார் !
தமிழ்மொழியே ஆட்சிமொழி எனச்சட்டம் தருவார் !
தமிழ்நாட்டின் பள்ளிகளில் தமிழ்த்தடையும் நீங்கும்
தமிழ்வழியில் கல்வியெனும் காலமினி ஓங்கும் !
தமிழ்க்கோவில் வழிபாட்டை தமிழினிலே செய்யும் !
தமிழில்தான் அறமன்றம் வழக்காடி உய்யும் !
தமிழ்வழியில் அறிவியலோ சொல்லெடுத்துக் கூவும் !
தண்டமிழர் வாழ்வியலில் உரிமையெலாம் மேவும் !

வானொலியில் தொலைக்காட்சி ஊடகத்தில் நாளும்
வாழ்ந்திருந்த பழந்தமிழின் பண்பாட்டை ஆளும் !
தேனொலியாம் தமிழினிலே விளம்பரங்கள் ஆடும் !
திருமணமும் குடமுழுக்கும் தமிழோதிப் பாடும் !
கூனலுறு குமுகாய நிலைநிமிர்ந்து நிற்கும் !
கூவுகின்ற தென்மொழிச்சீர் நாடெல்லாம் கற்கும் !
மானமுள்ள தமிழர்காள் ! தோளெழுவோம் வாரீர் !
மணங்கமழும் தமிழ்நாட்டைப் படைத்திடலாம் வாரீர் !

# தமிழ் எழுத்தின் தொடர்ச்சி

– முனைவர் இரா.கு.ஆல்துரை –

*சிந்துவெளி நாகரிகக் காலத்து முத்திரைகளில் காணப்படும் எழுத்துகள் அக்காலத்தில் அதாவது கி.மு.3500 ஆண்டளவில் எழுதும் நடைமுறை நாவலந்தேயத்தில் இருந்ததைக் காட்டுகின்றன. அங்குக் காணப்படும் எழுத்துகள் எகுபது (கி.மு.3200), சுமேரியா(கி.மு.3100 ஃபி 3000), முந்து எலாமைட்டு(கி.மு.3100 -2900)ஆகிய எழுத்துகளுடன் ஒப்புமை கொண்டுள்ளன என்று அறிஞர்கள் கருதுகின்றனர். சிந்துவெளி முத்திரைகளில் காணப்படும் மாந்த உருவங்கள் நைல் ஆறு நாகரிக (எகுபது)க் காலத்தவைபோல் உள்ளன என்கின்றனர். அதே நேரத்தில் இந்த மாந்த உருவங்கள் யூப்பரடிசு (சுமேரியா) ஆறு நாகரிகக் காலத்து முத்திரைகள்போல் இல்லை எனக் கருதுகின்றனர். மரம், பறவை, மீன் போன்றனவற்றைக் காட்டும் குறிகள் இம்மூன்று எழுத்துகளிலும் காணப்படுகின்றன. கருத்துப் படங்களின் படவெழுத்து மூலம் காண இயலாத அளவுக்கு மரபுத்தன்மைப் பெற்றவற்றில் இம்மூன்றிலும் குறிப்பிடத்தக்க அளவு ஒப்புமை காணப்படுகின்றன. குறைவான வெளிப்படைத் தன்மையுடன் மரபுப்படுத்தப்பட்ட கருத்துப் படங்களாக இத்தகையவை இருக்கின்றன. ஆகையால் இவ்வெழுத்துகள் எல்லாம் ஒரு பொதுவான முந்தைய எழுத்தினின்று உருவாகியிருக்க வேண்டும் என அறிஞர்கள் கருதுகின்றனர். முந்து எலாமைட்டில் கருத்துப் படங்களின் மூலங்களான படவெழுத்துகள் ஓரளவு அடையாளம் காணத்தக்கனவாக இருக்கின்றன. என்றாலும் இவையும் சிந்துவெளி, நைல் ஆறு. யூப்பரடிசு ஆறு ஆகிய முத்திரைகளுக்கிடையே காணப்படும் வேற்றுமையைப் போல் வேற்றுமையுடன் இருக்கின்றன.*

*சிந்து, நைல், யூப்பரடிசு ஆகிய ஆற்றோர நாகரிகங்களை ஆராய்ந்த அறிஞர்கள் அனைவரும் இம்மூன்று நாகரிகங்களுக்கிடையே தொடர்பு இருந்திருக்க வேண்டும் எனக் கருதுகின்றனர். என்றாலும் இந்த நாகரிகங்கள் அனைத்தும் ஒரே மூலத்தினின்று தோன்றியிருக்க வேண்டும் எனக் கருதுவதற்குப் போதிய சான்றுகள் கிடைக்கவில்லை. கிடைத்திருக்கும் சான்றுகளைக் கொண்டு இம் மூன்று நாகரிகங்களும் தனித்தனியாக உருவாகியிருக்க வேண்டும் என இன்றைய அளவில் அறிஞர்கள் கருதிவருகின்றனர். இந்நிலையில் இம்மூன்று நாகரிகக் காலத்து எழுத்துகளும் தனித்தனியாக உருவாகியிருக்க வேண்டும் என்றே கருத வேண்டியுள்ளது. என்றாலும் இம்மூன்று எழுத்துகளுக்கிடையே காலவோட்டத்தில் தொடர்பு ஏற்பட்டிருக்க வேண்டும் என்றும் அதனால் இவை ஒன்றனுக்கு ஒன்று உதவி மேம்பட்டிருக்க வேண்டும் என்றும் கருதுகின்றனர்.*

சிந்துசமவெளி எழுத்தில் கருத்தெழுத்து, உருபனெழுத்து, ஒலியனெழுத்து ஆகிய மூன்றும் உள்ளன என்கின்றனர். இதுவரை சிந்துசமவெளி முத்திரைகளில் எழுதபட்டுள்ள எழுத்துகளைப் படிக்கவியலாததற்கு இவற்றை விளக்கும் பொறிப்புகள் எதுவும் காணாதது கரணியம் ஆகும். அங்குக் காணப்படும் எழுத்துகள், குறிப்பாகக் களிமண் கட்டிகளில் எழுதப்பட்டவை எந்த நோக்கத்திற்காக எழுதப்பட்டன என்பதையும் இதுவரை உறுதியாகச் சொல்ல இயலவில்லை. எவ்வாறாயினும் எழுத்து முறையை அல்லது எண்ணத்தை வரிவடிவில் வெளிப்படுத்தும் முறையை அக்காலத்திலேயே அறிந்திருந்தனர் என்பது வெளிப்படை.

பொதுவாக எழுதப் பயன்படுத்தும் பொருள்கள் சில ஆண்டுகளில் அழியக் கூடியனவாக இருக்கின்றன. அறிவியல் தொழில்நுட்பம் வளர்ந்துள்ள இக்காலத்திலும் சில நூற்றாண்டுகள் வரை அழியாமல் இருக்கும் எழுதுபொருள்களை உருவாக்க இயலவில்லை என்பதைக் கவனிக்கவேண்டும். ஓலையில் எழுதப்பட்டவையால் சில நூற்றாண்டுகளுக்கு மேல் அழியாமல் இருக்கவியலாது. கிறித்தவத் தொடர் ஆண்டிற்குப் பிறகே செம்பு அல்லது வெள்ளித் தகடுகளில் எழுதும் முறை உருவாகியுள்ளது. இவை யாவற்றைக் காட்டிலும் கல்லில் பொறிக்கப்படுவன அழிவுக்கு உள்ளாகாமல் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் காப்பாக இருக்கும் தன்மையின. உலக அளவில் கி.மு.ஆறாம் நூற்றாண்டில் கல்லில் பொறிக்கப்பட்டவை கிடைத்துள்ளன. பழங்காலத்தில் எழுதப்படுவது பரவலாக இருக்கவில்லை. அந்நிலையில் எழுதப்படுவன பொது இடத்திலேயே அமைவனவாக இருந்துள்ளன. கல்வெட்டுகளைப் போன்றே களிமண் கட்டிகளில் அச்சுகொண்டு அழுத்தி எழுத்து உருவாக்கும் முறை பழங்காலத்தில் இருந்துள்ளது. சிந்துசமவெளி நாகரிகக் காலத்தில் இவ்வகையில் அமைந்த எழுத்துகள் பரவலாக இருந்துள்ளன. சிந்துசமவெளி நாகரிகக் காலத்துக் கீழ் எல்லை கி.மு.2000. அதன் பிறகு ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுக்காலத்தில் எழுத்துத் தொடர்ச்சிப் பற்றிய செய்தி எதுவுமே கிடைக்கவில்லை. புத்தர் மறைவுக்கு(கி.மு.544)ப்பின் சாக்கிய உடன்பிறப்புகள் அளித்த பிடகத்தைக் குறிக்கும் வகையில் உத்திர பைதிரத்துச் சித்தார்த்த நகரில் அமைந்த பிப்பிரவ வசெ கல்வெட்டுக் காலத்திற்கும் சிந்துவெளி முத்திரைக் காலத்திற்கும் இடையே எழுத்தைப் பற்றிய கல்வெட்டுச் செய்தியில்லாத ஒரு நீண்ட இடைவெளி காணப்படுகிறது. அதே நேரத்தில் அக்காலக் கட்டத்து இலக்கியச் சான்றுகள் எழுத்தைப்பற்றிக் குறிப்பனவாக இருக்கின்றன. அக்காலக் கட்டத்தினதான பழந்தமிழ் இலக்கணமான

தொல்காப்பியம் அக்காலத்தில் எழுத்து இருந்ததைத் தெளிவாகக் குறிப்பிடுகிறது. இதைப்போன்றே வடமொழி இலக்கணமான பாணினி எழுத்து இருந்ததைத் தெரிவிக்கின்றது. என்றாலும் இவை போன்றனவற்றைக் கொண்டு அக்காலத்து எழுத்து வளர்ச்சியைப்பற்றி முழுமையாக அறிந்து கொள்ள இயலாது.

பழங்கால இந்திய எழுத்துகள் இரண்டு பெரும்பிரிவுகளில் காணத்தக்கனவாக இருக்கின்றன. இவற்றுள் ஒன்று பிராமி. இது இடப்பக்கத்திலிருந்து வலமாக எழுதப்பட்டது. இவ்வெழுத்து இந்தியத் துணைக்கண்டத்தில் சட்லசு ஆற்றுக்குக் கிழக்கே பெரும் நிலப்பரப்பில் புழக்கத்தில் இருந்துள்ளது. இதன் பழைமை கி.மு. ஆறாம் நூற் றாண்டு. கி.மு.ஆறாம் நூற் றாண்டளவிலேயே நன்கு வளர்ந்த நிலையில் இருந்த இந்த எழுத்திலிருந்தே இன்றைய இந்திய எழுத்துகள் அனைத்தும் உருவாகியிருக்க வேண்டும் எனச் சிலர் கருதுகின்றனர். இந்திய எழுத்துகள் அனைத்தும் இடப்பக்கத்திலிருந்து வலமாக எழுதும் பிராமி அமைப்பைக் கொண்டுள்ளன. பிராமி உயிர், மெய் என்று தனித்தனியான எழுத்துகளைக் கொண்டது; ஒலியன் அமைப்பில் எழுத்து கொண்டது. இதைப்போன்றே இந்திய எழுத்துகள் அனைத்தும் தனித்தனியான உயிர், மெய் எழுத்துகளைக் கொண்டுள்ளன; ஒலியன் தன்மையில் எழுத்து கொண்டுள்ளன. மற்றொன்று கரோட்டி. இது வலப்பக்கத்திலிருந்து இடமாக எழுதப்பட்டது; சட்லசு ஆற்றுக்கு மேற்கே, குறிப்பாகத் தக்கசீலப்பகுதி, சுவாத்துப் பள்ளத்தாக்கு ஆகிய இடங்களில் புழக்கத்தில் இருந்துள்ளது. கி.மு.முதலாம் நூற்றாண்டில் கிழக்கே யமுனை ஆற்றின் மேற்குக் கடற்கரைவரை பரவியுள்ளது. அதே நேரத்தில் உச்சயினி, சவுராட்டிரம் ஆகிய பகுதிகளில் இவ்வெழுத்து வழக்கூன்றவில்லை. அங்குப் பிராமி புழக்கத்தில் இருந்துள்ளது. இவ் வெழுத்தின் பழைமை கி.மு.மூன்று அல்லது நான்காம் நூற்றாண்டு. இவ்வகை எழுத்து குறில் உயிர்களையே கொண்டுள்ளது. பிராமி எழுத்தைக் காட்டிலும் இது குறைந்த எண்ணிக்கை எழுத்துகளையே கொண்டுள்ளது. சட்லசு ஆற்றுக்கு மேற்கே கூட இதன் பயன்பாடு கி.பி.நான்காம் நூற் றாண்டோடு இல்லாமலாகியுள்ளது.

பிராமி,கரோட்டி ஆகிய எழுத்துகளைப் படிப்பதற்குப் பெருமுயற்சி எடுக்கவேண்டி இருந்தது. அறிஞர்கள் பலர் ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக் காலம் உழைத்து இதனைப் படித்துள்ளனர். கி.பி. 668 ஆம் ஆண்டில் தொகுக்கப்பட்ட பவன் ச்சுலின் என்னும் சீனக்குறிப்பேடு இவ்வெழுத்துகளைப் படிப்பதற்குப் பெருமளவில் துணை புரிந்துள்ளது. அது எழுத்துகளை மூன்று தெய்வங்கள் உருவாக்கின என்றும் ‘பன்’

என்னும் தெய்வம் இடப்பக்கத்திலிருந்து வலமாக எழுதும் பிராமி எழுத்துகளைக் கண்டுபிடித்ததாகவும் 'கியலு' என்னும் தெய்வம் வலப்பக்கத்திலிருந்து இடமாக எழுதும் கரோட்டியைக் கண்டுபிடித்த தாகவும் 'சாம்கி' என்னும் தெய்வம் மேலிருந்து கீழாக எழுதும் எழுத்தைக் கண்டுபிடித்ததாகவும் குறிப்பிடுகிறது. இதில் முதலிரண்டு இந்தியாவைச் சேர்ந்தன. மூன்றாம் எழுத்து சீன நாட்டினது. இங்கு வரும் 'பன்' என்பது பிரம்மாவையும் 'கியலு' கரோட்டா என்னும் தெய்வத்தையும் குறிப்பிடுகிறது என்கின்றனர்.

அசோகர் காலத்துக் கல்வெட்டுகள் பிராமி, கரோட்டி ஆகிய இரண்டு எழுத்துகளிலும் காணப்படுகின்றன. இதனைக்கொண்டு கி.மு.மூன்றாம் நூற்றாண்டில் இவ்விரு எழுத்துகளும் நடைமுறையில் இருந்தன என்பதை அறியலாம். இவ்விரு எழுத்துகளைப் பற்றிய செய்தி எதுவும் பார்ப்பன இலக்கியங்கள் எதிலும் இடம்பெறவில்லை. பாணினி இலக்கணத்தில் யவனானி லிபி (யவன எழுத்து) பற்றிய குறிப்பு வருகிறது. அசோகத் தூண்கள் எதிலும் பயன்படுத்திய எழுத்துகளின் குறிப்பு எதுவும் இடம் பெறவில்லை. சமற்கிருதத்தில் உள்ள புத்தரைப்பற்றிய நூலான இலலிதா வித்தாரம் 64 எழுத்துகளைப்பற்றிக் குறிப்பிடுகிறது. கி.பி.இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த இந்நூல் கி.பி.308-ல் சீனமொழியில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்நூல் பிராமி, கரோட்டி, தமிழ் போன்ற எழுத்துகளைக் குறிப்பிடுகிறது. அருக சமய மரபு முதலாம் அருக சமய ஆச்சாரியரான இரிசபநாதர் தன் இரு மகள்களான பிராமி, சுந்தரி ஆகிய இருவருக்கு முறையே எழுத்துகளையும், எண்களையும் சொல்லிக்கொடுத்தார் என்கிறது. மகள் பிராமிக்குச் சொல்லிக்கொடுத்தது பிராமி எனப்பட்டது என்கிறது அம் மரபு. பகவதி சூத்திரம் என்னும் நூல் பிராமி எழுத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

அருக சமய நூல்களான சமவாயங்க சுட்தம், பண்ணவான சுட்தம் ஆகியன குறிக்கும் பதினெட்டு வகை எழுத்துகளுள் பிராமியிலிருந்து தமிழ் வேறாக இருக்கிறது. புத்த நூலான இலலிதாவித்தாரமும் பிராமியையும் தமிழையையும் வேறு வேறாகக் காட்டுகிறது. இவை போன்றவற்றைக் கொண்டு தமிழும் பிராமியும் தனித்தனி எழுத்துகளாகப் பல்லாண்டுக்காலம் இருந்துள்ளன என்பதை அறிந்துகொள்ளலாம். பண்டைய தமிழ் இலக்கியங்களில் பிராமி எழுத்தைப்பற்றிய குறிப்பு எதுவும் இல்லை. அசோகன் ஆட்சிக்குத் தமிழகம் உட்பட்டதில்லை. அசோகன் காலத்தில் தமிழகத்தில் மூவேந்தர் ஆட்சி நடைபெற்றுள்ளது. அசோகன் காலத்திற்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்பே பிராமி எழுத்தும் இருந்துள்ளது. இந்நிலையில் அசோகன் பிராமியிலிருந்து தமிழ்

எழுத்து வளர்ந்துள்ளது என்று கூறுவோர் கூற்றின் புரைமையைக் கண்டுகொள்ளலாம். மோரியப் பேரரசன் அசோகன் காலத்தில்தான் முதன் முதலாகப் பிரமி பயன்பாட்டில் இருந்தது என்னும் கூற்றும் ஆராய்ந்து சொன்னது அன்று. ஆக அசோகன் பிராமி என்று குறிப்பிடுவது அசோகன் காலத்தில் நடைமுறையில் இருந்த பிராமி என்று வேண்டுமானால் சொல்லலாம். அதற்கு முன்பே பிராமி எழுத்து நடைமுறையில் இருந்துள்ளது.

பிராமியில் வருக்க எழுத்துகள் உண்டு. தமிழில் வருக்க எழுத்துகள் இல்லை. இத்தன்மையை வைத்துப் பார்த்தால் தமிழ் எழுத்திலிருந்தே பிராமி எழுத்து உருவாகியிருக்க வேண்டும் எனத் துணியலாம். சிந்துசமவெளி நாகரிகக் காலத்திலேயே எழுத்துகளைக் கொண்டிருந்தது தமிழ். இடையில் சற்றொப்ப ஆயிரத்து ஐந்நூறு ஆண்டுக்காலத்தில் அதன் தொடர்ச்சியைக் காட்டும் சான்றுகள் கிடைக்கவில்லை என்பதற்காகச் சிந்துசமவெளி நாகரிகம் வேறு பழந்தமிழ் நாகரிகம் வேறு என்று சொல்லவியலாது. படவெழுத்து, கருத்தெழுத்து, உருபனெழுத்து, ஒலியனெழுத்து என்றாற் போன்ற இயல்பான எழுத்து வளர்ச்சி நிலையைக் கொண்டது தமிழ் எழுத்து என்பது வெளிப்படை. ஆனால் இத்தன்மையை விளக்கவேண்டிய நிலையில் இருக்கிறோம். எவ்வாறாயினும் ஏறக்குறைய எழுத்தின் முழு வளர்ச்சியைத் தமிழ் சிந்துவெளி நாகரிகக் காலத்திலேயே பெற்றுள்ளது. அந்த வகையில்தான் கி.மு.ஏழாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தினதான தொல்காப்பியம் முழுமையாக வளர்ந்த எழுத்து நிலையைக் குறிப்பிடுகிறது.

---

## தென்மொழி நன்கொடைப் பட்டியல்

| | | |
|---|---|---|
| 06.02.2013 | திரு.வேலரங்கன், காளையார்கோயில் | 30 |
| 06.02.2013 | திரு.வ.வேம்மையன், மறைமலை நகர் (126ஆம் முறை) | 50 |
| 24.02.2013 | புலவர் அ.மே.சௌந்திரராசு, மறைமலை நகர் | 150 |
| 03.03.2013 | திரு.க.தமிழிச்சமரன், பெரம்பூர் | 100 |
| 03.03.2013 | திரு.கழராம்யன், திண்டுக்கல் | 500 |
| 03.03.2013 | திரு.தோழனரசர், தாம்பரம் | 500 |
| 05.03.2013 | திரு.வ.வேம்மையன், மறைமலை நகர் (127ஆம் முறை) | 50 |
| 06.04.2013 | திரு.வ.வேம்மையன், மறைமலை நகர் (128ஆம் முறை) | 50 |
| 02.05.2013 | திரு.குப்பன், திருத்தணி | 500 |
| 06.05.2013 | திரு.வ.வேம்மையன், மறைமலை நகர் (129ஆம் முறை) | 50 |
| 06.05.2013 | மருத்துவர் கே.இராமசந்திரன், சென்னை – 600 094 | 380 |

# ‘திராவிடம்’ என்பதே தீது

**- மொழிஞாயிறு பாவாணர் -**

நாடுகளெல்லாம் பெரும்பாலும் மொழியடிப்படையிலேயே அமைந்திருப்பதனாலும், அதன் வழியாகவே முன்னேறுவதாலும், தமிழர் யாவரும் தமிழ்ப்பற்று கொண்டிருத்தல் வேண்டும். எந் நாட்டாராயினும், தமிழ்ப்பற்றுடையார் தமிழரே. இந் நாட்டாராயினும், அஃதில்லார் அயலாரே.

தமிழ்ப் பெயரே தாங்குதலும், இயன்றவரை தூயதமிழிற் பேசுதலும், எழுதுதலும், திருமணமும், சடங்குகளும் கோயில் வழிபாடும் தமிழிலேயே நடப்பித்தலும், மக்கள் உலகத்தில் ‘தேவமொழி’யில்லையென நம்புதலும், கட்டாய இந்திக் கல்வியைத் தமிழ்நாட்டில் அடியோடொழித்தலும், தமிழன் என்பதற்கு அடையாளமாம். தமிழிற்கு இடைக்காலத்தில் நேர்ந்த இழிவினால் பல தென்சொற்கள் வழக்கற்றுப் போயின. அவற்றை மீண்டும் வழக்கிற்குக் கொண்டு வருதல் வேண்டும்.

கால்டுவெல் கண்காணியார் முதன்முறையாகத் திராவிட மொழிகளை ஆய்ந்ததினாலும், அக் காலத்தில் தமிழ்த் தூய்மை யுணர்ச்சியின்மையாலும், தமிழைத் திரவிடத்தினின்று வேறுபடுத்திக் காட்டத் தேவையில்லாதிருந்தது. இக் காலத்திலோ, ஆராய்ச்சி மிகுந்துவிட்டதனாலும், வடமொழியும் இந்தியும் பற்றிய கொள்கையில், தமிழர்க்கும் பிற இன மொழியாளர்க்கும் வேறுபாடிருப்பதனாலும், தமிழென்றும், பிற இனமொழிகளையே திரவிடம் என்றும் வேறுபடுத்திக் காட்டுதல் இன்றியமையாததாம்.

தமிழ் தூய்மையான தென்மொழியென்றும், திரவிடம் ஆரியங்கலந்த தென்மொழியென்றும் வேறுபாடறிதல் வேண்டும். பால் தயிராய்த் திரைந்தபின் மீண்டும் பாலாகாததுபோல், வடமொழி கலந்து ஆரிய வண்ணமாய்ப்போன திரவிடம் மீண்டும் தமிழாகாது. வடமொழிக் கலப்பால் திரவிடம் உயரும்: தமிழ் தாழும். ஆதலால், வடசொல் சேரச் சேரத் திரவிடத்திற்கு உயர்வு; அது தீரத்தீரத் தமிழிற்கு உயர்வு. திரவிடம் என்ற மொழி நிலையே வடமொழிக் கலப்பால்தான் நேர்ந்தது. அல்லாக்கால் அது கொடுந் தமிழ் என்றே பண்டுபோற் கூறப்படும். தமிழ் தனித்தியங்கும்: திரவிடம் வடமொழித் துணையின்றித் தனித்தியங்காது.

இங்ஙனம், வடமொழியை நட்பாகக் கொள்ளும் திரவிடத்திற்கும் பகையாகக் கொள்ளும் தமிழிற்கும், ஒரு சிறிதும்

*நேர்த்தம் இருக்கமுடியாது: ஆதலால் தமிழ், தமிழன், தமிழ்நாடு என்ற சொற்களன்றித் திரவிடம், திரவிடன், திரவிட நாடு என்ற சொற்கள் ஒலித்தல் கூடாது. திரவிடம் அரையாரியமும் முக்காலாரியமு மாதலால், அதனோடு தமிழை இணைப்பின், அழுகலோடு சேர்ந்த நற்கனியும் கெடுவதுபோல் கெட்டுப்போம். பின்பு தமிழுமிராது, தமிழனு மிரான், இந்தியா முழுவதும் ஆரியமாய்விடும்.*

*தமிழ், திரவிட மொழிகளைப்போல ஆரியச் சார்பு கொள்ளாமையாலும், வடமொழியையும் இந்தியையும் ஏற்காத தாலும், தமிழ் நாட்டிற்கு மொழியியல் தன்னாட்சி* (Lingusitic Autonomy) *பெறுதல் வேண்டும். போக்குவரத்து, தற்காப்பு, வெளிநாட்டுறவு ஆகிய முத்துறையிலும், இந்தியக் கூட்டரசு அடங்கியிருக்கலாம்.*

*திராவிட முன்னேற்றக் கழகம், தமிழ்நாடு என்னுங் கொள்கையை விட்டுவிட்டுத் திராவிட நாடு என்னும் பொருத்தமற்ற கொள்கையைக் கடைப்பிடித்தும், தமக்குத் தாமே முட்டுக்கட்டை யிட்டுக்கொண்டது. இவை நீங்கினாலொழிய முன்னேற்றமும் வெற்றியுமில்லை.*

*தமிழ் என்னுஞ் சொல்லிலுள்ள உணர்ச்சியும் ஆற்றலும், திராவிடம் என்னுஞ் சொல்லில் இல்லை. திராவிடம் பனிமலை (இமயம்) வரை பரவியுள்ளது.*

*தமிழ் சென்னையைத் தலைநகரமாகக் கொண்ட தென்னாட்டில் மட்டுமுள்ளது. தமிழ் வேறு, திராவிடம் வேறு. தமிழையும் திரவிடத்தையும் இணைப்பது, பாலையும் தயிரையும் கலப்பது போன்றதே.*

*தமிழ்நாடு பிரிந்தபின், குறைந்தபட்சம் தென்னாட்டுத் திரவிடரெல்லாம் தமிழரொடு கூடி மிகப்பரந்த புலனங்களில் (விஷயங்களில்) ஒரு கூட்டொப்பந்தம் செய்யும்போதே தி.மு.க. சொல்லும் திரவிடம் தோன்றும். அதற்கு இன்று தமிழர்மட்டுமே முயல்வது, வானத்து மீனுக்கு வன்றூண்டிலிட்ட கதையேயாம்.*

*இதுகாறுங் கூறியவற்றால், உண்மை நிலையை உள்ளவாறு ணர்ந்து, நடைமுறைக்கொவ்வாத வீண் கொள்கை களையும் வீறாப்புக்களையும் விட்டுவிட்டு, எடுத்த முயற்சி இடையூறின்றி வெற்றிபெறுதற் பொருட்டு, பொதுநலத்தை முன்வைத்து ஒன்றுமையாகப் போராடி, முன்னேற்றப்பாதையில் முனைந்து செல்க.*

('தமிழ்' இதழில் வெளியான கட்டுரையிலிருந்து)

சென்ற இதழின் தொடர்ச்சி...

# இந்தியாவில் அழிக்கப்பட்டுவரும் தமிழினம்!

- தேவாரம் மு.தனராசு -

பாலாற்றின் நீரடிப்படை, கருநாடக அரசு கட்டிய நானூறுக்கும் மேற்பட்ட தடுப்பணைகளால் தடுக்கப்பட்டுள்ளது. அதே பாலாற்றில், கருநாடகத்தைத் தாண்டிவரும் நீரையும், ஆந்திர அரசு, தன்பங்குக்கு 30 மேற்பட்ட சிற்றணைகள் கட்டிச், சொட்டு நீர்கூட பாலாற்று நீர் தமிழ்நாட்டுக்குள் வரவிடாமல் செய்துள்ளது.

தமிழ்நாட்டில் பாலாற்றின் கரைகளில் வாணியம்பாடிவரை 900க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

இதற்குப் பாலாற்றின் நிலத்தடி நீர் உறிஞ்சப்பட்டு தோல் பதனிடப் பயன்படுத்திக்கொண்டு நஞ்சாக்கப்பட்டு மீண்டும் நிலத்தில் விடப்படுகிறது.

இந்தியாவில் உத்திரப் பிரதேசத்தில் ஒரு சில தோல் தொழிற்சாலைகளைத் தவிர, வேறு எந்த மாநிலங்களிலும், தோல் தொழிற்சாலைகள் அமைக்கப்படாமல், தமிழ்நாட்டை அழிக்கத் திட்டமிட்டுப் பெருவாரியாக இங்கு அமைக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் செயல்படும் தோல்தொழிற்சாலைகளில் முக்கால் பங்கு தோல் தொழிற்சாலைகள், தமிழ் நாட்டில் பாலாறு பாசனப்பகுதி, திண்டுக்கல் பகுதிகளில் 1000க்கும் மேற்பட்ட தோல் தொழிற்சாலைகள் செயல்படுகின்றன. இதனால் தமிழ்நாட்டின் மூன்றாவது பாசனப் பகுதியான பாலாற்றுப் படுகை முழுவதும், பயிர் செய்வதற்கு மட்டுமல்லாமல், மாந்தர்கள் வாழத் தகுதியற்ற பகுதியாக மாற்றப்பட்டுள்ளது. நிலம், நிலத்தடி நீர், ஆறு, ஆற்றுநீர், காற்று, சுற்றுச் சூழல் அனைத்தும் பாழ்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் முதன்மையான பாசனப் பகுதியான காவிரிப் பாசனப்பகுதி வறட்சியின் பிடியில் சிக்கித் தவிக்கின்றது.

இந்திய அரசின் துணையுடன், கருநாடகத்தில் ஏழு பெரும்அணைகள் கட்டப்பட்டுள்ளதாலும், நூற்றுக்கணக்கான தடுப்பணைகள் கட்டியும் காவிரி நீர் தடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டுக் தி.மு.க, அ.தி.மு.க. அரசுகளின் ஆதரவுடன் இந்திய அரசின் தூண்டுதலால் கருநாடகத்தில் காவிரி நீர் மறிக்கப்பட்டு, தமிழ்நாட்டின் காவிரிப் பாசனப்பகுதி வரண்டு வளமற்றுப்போயுள்ளது.

மாறி மாறி வந்த கருணாநிதி, செயலலிதா ஆட்சிகளில் இன்று செயலலிதா ஆட்சியில், தமிழ்நாட்டிற்கு நீர் தர வேண்டும் என்ற காவிரி ஆற்று நீர் ஆணையத்தின் தீர்ப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுவிட்டதாம்.

அரசிதழில் வெளியிட்டுவிட்டால் என்ன நடக்கப்போகிறது. மீண்டும் காவிரி நீர் மறிப்பு மீண்டும் உச்ச வழக்குமன்றம், ஆற்று நீர் ஆணையம் என்று தட்டாமாலை சுற்றுவார்கள், தி.மு.க, அ.தி.மு.க, கருநாடக இந்திய அரசுகள். தமிழ்நாட்டின் இரண்டாவது பாசனப் பகுதியான தாமிரபரணிப் பாசனப் பகுதி, திட்டமிட்ட மணல் கொள்ளையால், பாழ்பட்டுப்போய் நிற்கிறது.

முல்லைப் பெரியாற்று நீர் உரிமையில் உச்ச வழக்குமன்றத் தீர்ப்பினைச் செயல்படுத்தாமல், நீர் உரிமைக்குப் போராடிய மக்களை கடும் அடக்குமுறையால் தடியடி நடத்தி ஒரே நாளில் செயலலிதா அடக்கிவிட்டார். இதனால் கம்பம் பள்ளத்தாக்கும், ஐந்து தென்மாவட்டங்களும், பயிர்த்தொழிலில் கேடடைந்துள்ளது.

அதேபோல, அமராவதி, பவானி அணைகளின் நீர் உரிமைகள் மலையாளிகளால் மறுக்கப்பட்டு, ஒட்டுமொத்தமாகத் தமிழ்நாட்டின் பயிர்த் தொழிலே, பாழ்பட்டுக் கேள்விக் குறியாய் மாறிவிட்டது.

இன்னமும் நாம் இந்தியாவில் இருக்க வேண்டுமா ?

உலக நாடுகளாலும், இந்தியாவின் பிற மாநிலங்களாலும், விரட்டி அடிக்கப்பட்ட அணு உலைகள், செம்பாலைகள், ‘பாக்சைட்’ ஆலைகள், சாராய ஆலைகள், தோல் தொழிற்சாலைகள், இரசாயன ஆலைகள் மட்டுமல்லாமல், தொழில் வளர்ச்சி என்ற பெயரில் வெளிநாட்டு நிறுவனங்களின் தொழிற்சாலைகள் எல்லாம் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டு, வேளாண் நிலங்கள் பறிக்கப்பட்டு உழவர்கள் விரட்டப்படுகின்றனர்.

தமிழ்நாட்டு விளைநிலங்களை அழித்துக் கட்டப்பட்டதுடன், இந்தத் தொழிற்சாலைகளில், தமிழர்களுக்கு வேலைகொடுக்காது, தொழிற்சாலைக் கட்டுமானத்திற்கு முதற்கொண்டு வெளி மாநில ஆட்களைக் கொண்டுவந்து சேர்த்துத் தமிழ் நாட்டில் தமிழர்களைச் சிறுபான்மையினராக்கும் வேலை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டே இருக்கிறது.

இனியும் நாம் இந்திய அமைப்பில் இருக்க வேண்டுமா ?

நாற்கரச்சாலைகள் என்ற பெயரில், தமிழ்நாட்டின் மழை வளத்திற்கு அடிப்படையான கோடிக்கணக்கான மரங்கள் அழிக்கப்பட்டு, தமிழ்நாடு பாலை நிலமாக்கப்பட்டுள்ளது.

நாற்கரச்சாலை போடுவதற்காகத், தமிழ்நாட்டு ஊர்களில் சாலை ஓரங்களில் குடியிருந்த தமிழர்களின் வீடுகள் ஈவு இரக்கமின்றி

இடித்துத்தள்ளப்பட்டன. தமிழர்கள் வீடற்றவர்களாக மாற்றப்பட்டனர். பல்லாயிரம் குறுக்கம் (ஏக்கர்) நிலங்கள் பாழ்படுத்தப்பட்டுள்ளன.

ஒரு குறுக்கம் (ஏக்கர்), இரண்டு குறுக்கம் (ஏக்கர்) நிலத்தில் பயிர்த்தொழில் செய்து கொண்டிருந்த விவசாயிகளின் நிலங்கள் வன்கவர்வு செய்யப்பட்டதால், மீதி உள்ள நிலத்தில் ஏதும் செய்ய முடியாமல், பாத்திபோட்டு வீட்டடி மனைகளாக மாற்றி அடி மாட்டு விலைக்கு விற்கும் கொடுமையும் நிறைவேறியுள்ளது.

இதனால் தமிழ்நாட்டின் நெடுஞ்சாலைகளின் இரண்டு பக்கமும் வீட்டடி மனைகளே போடப்பட்டு விற்கப்படுகின்றன.

ஆனால், இந்த வீட்டடி மனைகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப தமிழ்நாட்டில் மக்கள் இல்லை. எனவே, இந்த வீட்டடி மனைகள் வெளிநாட்டவருக்கு விற்கப்பட்டு, தமிழ்நாட்டில் வெளிநாட்டவர் குடியேற வகைசெய்யப்படுகிறது. இதனாலும், தமிழ்நாட்டில் தமிழர்கள் சிறுபான்மையினராகும் வாய்ப்புப் பெருகியுள்ளது.

ஒரு இலகத்து எழுபத்தாறாயிரம் கோடி போன்ற கோடிகளில், சில நூறு கோடிகளாவது இங்கு கோடி காட்டியிருப்பார்கள் அல்லவா. அதன் விளைவாகவே, இந்த வீட்டடி மனைத் தொழில் நடைபெறலாம்.

எது எப்படி ஆனாலும், விரைவில் தாய்த் தமிழ் நாட்டின் தமிழர்கள், தமிழ்நாட்டிலேயே ஏதிலிகளாக மாறும் வாய்ப்புகள் தெளிவாக உருவாக்கப்பட்டுள்ளன.

தமிழ் ஈழம் அழிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் தமிழ் அழிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் செத்தமொழிகள் வரிசையிலே தமிழ்மொழி சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டைத், தமிழர்களை அழிக்கும் வேலை, திராவிடக் கட்சிகளின் துணையுடன் இந்திய அரசால் தெளிவாகத் திட்டமிட்டு நடத்தப்படுகின்றது.

இன்னமும் நாம் விழிக்கவில்லை என்றால், தமிழ், தமிழர், தமிழ்நாடு என்று உச்சரிப்பதற்குக்கூட முடியாத நிலை விரைவில் உருவாகிவிடும்.

தமிழர்களாகி நாம் இந்தியா என்ற அமைப்பில் இருந்து அழியப் போகிறோமா அல்லது இந்திய அமைப்பிலிருந்து விடுபட்டு வாழப்போகிறோமா என்பதைப் பற்றிச் சிந்திக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.

தமிழர்களே சிந்தியுங்கள்!

# செந்தமிழ் வல்லுநர் புலவர் செ.வரதராசனார் மறைவு



கல்லைத் தமிழ்க் கழகத்தின் தலைவரும், 'குறள் மணம்' திங்களிதழாசிரியரும், 2012ஆம் ஆண்டில் தமிழக அரசின் 'திருவள்ளுவர் விருது' பெற்றவரும், நமதமைப்பின் நெடுநாள் அன்பரும், அய்யா பாவலரேறு அவர்களின் 'உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்' தொடக்க விழாவைத் தமது கல்லைத் தமிழ்க் கழகத்தில் முன்வைத்து நடத்தியவருமான (செ.வ. புகழேந்தியின் தந்தையாருமான) செந்தமிழ் வல்லுநர் புலவர் செ.வரதராசனார் அவர்கள் கடந்த 13.04.2013 அன்று கள்ளக்குறிச்சியில் இயற்கை எய்தினார்.

அவரது இரு கண்கள் மற்றும் உடல் முழுமையும் மருத்துவத் துறைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டன. புலவர் செ.வரதராசனார் மறைவுக்குத் தென்மொழி தன் ஆழ்ந்த இரங்கலையும் அன்னாரின் மக்களுக்குத் தன் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்கிறது.

# பாவலர் மு.வ.பரணன் மறைவு

உலகத் தமிழ்க் கழகத் தொடக்கக் காலத்தில் பாவாணரும், பாவலரேறுவும் திருச்சிராப்பள்ளியில் தங்கிப் பணியாற்றிக் கொண்டிருந்த போது இளைஞரும் பொறியியல் மாணவருமாக இருந்த நடுவை பரமசிவம் என்ற மு.வ.பரணன் வளைய வளைய அவர்கள் இட்ட அனைத்துப் பணிகளையும் செய்யும் வகையில் துணையாக இருந்து அருந்தொண் டாற்றியவர். அதன்பின் திருச்சி பாரத மிகுமின் தொழிலகத்தில் மின் பொறியாளராகப் பணியாற்றி 2003இல் விருப்பார்ந்த ஓய்வு பெற்ற பின்னும் இந்தியாவில் செயற்படும் அனல்மின் நிலையங்களில் எங்கு பழுது ஏற்படினும் அழைக்கப்பெறும் நுட்பத்தொழில் முனைவராக விளங்கினார் – மொழிஞாயிறு பாவாணரை அறிவாசானாகவும் – பாவலரேறு பெருஞ்சித்திரனாரை உணர்வாசானாகவும் – செந்தமிழ் அந்தணர் இளங்குமரனாரை வாழ்வியல் ஆசானாகவும் பெற்று தம் வாழ்வை அமைத்துக்கொண்டியங்கியவர் – மரபுப் பாடல்கள் யாக்குந்திறன் கைவரப் பெற்று இலக்கண இலக்கியச் செறிவான தனிப்பாடல்களும் 'ஆண்டகை, தமிழ் ஐந்திணை' என்ற இலக்கிய நூல்களை வெளியிட்ட பாவலர் மு.வ.பரணன் என்ற பெருமகனார் திடீரென்று உடல் நலக்குறைவேற்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பெற்று (04.05.2013) தி.பி.2044 மேழம் 21 அன்று உயிர்நீத்தார்.

பாவலரேறு ஐயாவோடும் தென்மொழியோடும் நெடுங்காலம் தொடர்பிலிருந்து வந்தவர். அவர்களுக்குப்பின் இறைக்குருவனாரோடு தொடர்பிலிருந்து யாப்பு இலக்கணத்தில் ஆழ்ந்த கலந்துரையாடும் வகையில்

ஆழமான இலக்கணப்புலமை பெற்றவர். அவரின் 'ஆண்டகை' எனும் பாடல் நூலின் சென்னை அறிமுகக் கூட்டத்தைப் பாவலரேறு தமிழ்க்களத்தில் இறைக்குருவனார் தலைமையில் நடத்தியவர்.

அண்மையில் கனிச்சாறு நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு அவ்விழாப் பாவரங்கத்தில், பாவரங்கத் தலைமையேற்று வீறான பாடலைத் தம் செம்மாப்புத் தோற்றத்திலும் குரல்வளத்திலும் மேடைக்கு அணி செய்து எடுத்துரைத்தார். அதுவே அன்னாரின் இறுதி நிகழ்வாகப்போனது.

தமிழ்நாட்டின் அனைத்து அமைப்புத் தமிழ் அன்பர்களுடனும் அறிமுகமாகி இணக்கமாகப் பழகும் அன்பும் பண்பும் பெற்றவர். அப் பேராளரின் மறைவுக்குத் தென்மொழி தன் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது.

## 'தமிழியம்' பறம்பை அறிவனார் மறைவு

பரமகுடியில் நடந்த உலகத்தமிழ்க் கழக முதல் மாநாட்டில் அதை நடத்திய தமிழ்க்குடிமகனாரோடு தோளோடு தோள்நின்று பணியாற்றித் தனித்தமிழ் உலகிற்கு அறிமுகமானவர் பறம்பை அறிவனார். தமிழகத்தில் இயங்கிவரும் அனைத்துத் தமிழ் அமைப்புகளும் தமிழியச் சிந்தனையைக் கைக்கொள்ளும் அளவில் அனைத்து அமைப்பினர்க்கும் அறிவுரைஞராகச் செயற்பட்டு வந்தார். உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் தொடங்கியதிலிருந்து பாவலரேறு மறைவு வரையிலும் அதன் பொதுச் செயலாளராக பணியாற்றியவர் பறம்பை அறிவனார்.

பொதுமைச் சிந்தனையும் தமிழியச் சிந்தனையும் உள்ளடக்கிய அவர்கள் 'தமிழியம்' என்ற ஓர் அமைப்பினை அமைத்துக்கொண்டு 'தமிழியம்' என்ற பெயரில் இதழ் ஒன்றையும், தனி வெளியீடுகள் பலவற்றை அப்போதைக்கப்போது வெளியீடு செய்து கொண்டிருந்தார்.

பாவலரேறு 'தமிழ் நிலம்' இதழில் 'பறம்பை அறிவன் பக்கம்' என்ற பக்கங்களை ஒதுக்கி அவரின் எழுத்துகள் தொடர்ந்து வெளிவரச் செய்தார். தென்மொழியிலும் அவரின் கட்டுரைகளும் உரைப்பா வடிவில் உள்ள செய்திகளும் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருந்தன.

சிறிது காலத்திற்குமுன் அவரின் துணைவியார் மறைந்தார். அதையொட்டி சென்னைக்கும் மதுரைக்கும் தன் மகன் மகள் இல்லங்களில் மாறிமாறி இருந்த அவர் உடல்நலக் குறைவேற்பட்டு மதுரையில் தன் மகள் இல்லத்தில் தங்கியிருந்தார். தி.பி.2044 விடை 5 (19.05.2013) அன்று பிற்பகல் மதுரையில் தன் மகள் இல்லத்திலேயே மறைவுற்றார்.

தமிழ் அமைப்புகள் அனைத்திலும் பொதுவானவராக மதிக்கப்பெற்ற அவர் தமிழியச் சிந்தனையைத் தம் வாழ்நாள் முழுவதும் பரப்பும் பணியைச் செவ்வனே செய்து வந்தார்.

தென்மொழி அவரின் இழப்பிற்குப் பெரிதும் வருந்துகிறது. அன்னாரின் மக்களுக்குத் தன் ஆறுதலைத் தெரிவித்துக்கொள்கிறது.

# நூல்நிறை

## தமிழரின் எழுத்தறிவு

ஆசிரியர் : நடன.காசிநாதன்

விலை : உரு.40.00

*தொல்லியல்துறை மேனாள் இயக்குநர் முனைவர் நாகசாமியின் தமிழ், சமற்கிருதம் ஆகியவற்றின் கண்ணாடி (ஆசைசடிச டிக கூயஅடை யனே ஞயளேமசவை) என்னும் ஆங்கில நூல், பார்ப்பனர்க்கு ஏற்றம் தரவேண்டும், தமிழரை மட்டம்தட்ட வேண்டும் என்னும் உள்நோக்கத் தமிழரின் எழுத்துடன் இட்டுக்கட்டி, உண்மைக்குப் புறம்பான செய்திகளுடன் வெளிவந்திருப்பதைப் பலரும் அறிவர். இதற்கான எதிர்ப்பு பல்வேறு நிலைகளில் பல்வேறு இடங்களில் எழுந்துள்ளது நாடறிந்த செய்தி. இந்நூல் நெடுகிலும் புரையோடி இருக்கின்ற புரைமைகளை அவ்வத்துறைத் தமிழறிஞர்கள் தெளிவாகக் காட்டியுள்ளனர். அவ்வகையில் அந்நூலில் இடம்பெற்றுள்ள தமிழரின் எழுத்தறிவுத் தொடர்பான பொய்யுரைகளுக்கு அத்துறையில் துறைபோகிய தொல்லியல் அறிஞர் நடன.காசிநாதன் உரிய உண்மையுரை அளிக்கும் வகையில் எழுதியுள்ளதுதான் தமிழரின் எழுத்தறிவு என்னும் இந்நூல்.*

*முனைவர் நாகசாமியின் எழுத்து பற்றிய கருத்துகள் ஒவ்வொன்றினையும் எடுத்துக் கொண்டு அவற்றிற்குச் சரியான மறுப்புரையளித்துத் தம் நோக்கத்தினை முழுமையாக நிறைவேற்றியுள்ளார் இவர். இவர்தம் நூல் முழுமையும் முனைவர் நாகசாமியின் நூலில் காணப்படுவதுபோல் தான்தோன்றித்தனமாக எதையும் குறிப்பிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கல்வெட்டு, அகழ்வாராய்ச்சி, இலக்கியம் ஆகியவற்றிலிருந்து சான்றுகள் காட்டி, எடுத்த தம்பொருளைச் செவ்வனே விளக்கியுள்ள திறம் பாராட்டுதற்குரியது. இதோடு நிற்காமல் எழுத்தின் தோற்றம் வளர்ச்சி தொடர்பானவற்றைப் பண்டைய நாகரிக எழுத்துகளோடு ஒப்பிட்டு விளக்கியிருப்பது இவர் இத்துறையில் பெற்றிருக்கும் தெளிவினைக் காட்டிநிற்கிறது.*

*இந்நூல் எழுத்துக்கலையின் தோற்றம், வளர்ச்சி ஆகியவற்றைப் பற்றி உருவம், உருவ எழுத்து, கருத்தெழுத்து, சொல்லெழுத்து, முன்னோடி ஒலியெழுத்து என்றாற்போன்று வரும் படிநிலைகளுடன் ஒரு தெளிவான விளக்கத்தைக் கொண்டுள்ளது. இதனுடன் பழந்தமிழ் நாட்டில் எழுத்து வளர்ச்சி பெற்ற நிலையையும் விளக்குகிறது. படவிளக்கங்கள் கொடுத்திருப்பது நல்ல தெளிவினைத் தருகிறது. இந்நூலில் குறிப்பாக மூன்று கருத்துகள் கவனிக்கத்தக்கனவாக இருக்கின்றன. பண்டைய தமிழ்*

*எழுத்து வளர்ச்சியினைப் பழந்தமிழ் நாகரிக (அரப்பா நாகரிக) எழுத்துகளோடு தொடர்புப்படுத்திப் பார்க்கவேண்டிய தேவையை வலியுறுத்தி நிற்பது முதலாம் நிலை. அடுத்ததாக அரப்பா நாகரிகம் பண்டைய நாகரிகங்களான எகுபது, சுமேரியா, பழம் எலாமைட்டு ஆகிய நாகரிகங்களுக்கு முந்தியது என்பது. அவ்வாறாயின் பழந்தமிழ் எழுத்துகள் உலக அளவில் பழமையானது என்பதும் பண்டைய உலக எழுத்துகள் இதன் வழி பிறந்தன என்பதும் பெறப்படும். மூன்றாவதாகப் பிராமி என்று பழந்தமிழ் எழுத்துக்குப் பெயர் கொடுத்திருப்பதன் பொருத்தமின்மையை விளக்குவது.*

*அசோகன் காலத்திற்குமுன் தமிழில் எழுத்து இருந்திருக்கிறது. அசோகன் கல்வெட்டுகள் கரோட்டி எழுத்திலும் இருக்கின்றன. அசோகன் ஆட்சிக்குத் தமிழகம் ஒருபோதும் உள்ளாகவில்லை. அவன் ஆட்சிக்காலத்தில் சேர, சோழ, பாண்டியர் ஆட்சி சிறப்பாக இருந்திருக்கிறது. எல்லாக் கலைகளிலும் சிறப்புற்றிருந்த தமிழகத்தில் எழுத்துக்கலை உருவாகாமல் இருந்திருக்குமா? முக்கழகங்கள் இருந்து எண்ணிலடங்கா செவ்விலக்கியங்களைப் படைத்த தமிழகத்தில் எழுத்துக்கலை சிறப்புற்றிருந்தது என்பதில் ஐயம் இருப்பதற்கு இடமில்லை. இந்நிலையில் தொல்லியல் அறிஞர் நடன.காசிநாதன் வேண்டுகோள் விட்டிருப்பதை முழுமனத்துடன் ஏற்றுக்கொண்டு இனி பிராமி என்று குறிப்பிடுவதை முற்றிலும் தவிர்க்க வேண்டும். அதைத் ''தமிழ்'' எழுத்து என்று குறிப்பிடுவதே சாலச்சிறந்தது.*

– முனைவர் இரா.கு.ஆல்துரை –

## நெல்லை வட்டார வழக்குச் சொல் தொகை

ஆசிரியர் : வெள் உவன்

விலை : உரு.80.00

*''நெல்லை வட்டாரவழக்குச்சொல் தொகை'' என்றதலைப்பில் திரு.வெள்உவன் சொல் வரிசை ஒன்றினை வெளியிட்டுள்ளார். இந்நூலுக்கு இவர் அகரமுதலி அல்லது அகராதி என்று பெயரிடவில்லை. என்றாலும் சொற்கள் அகரவரிசை படுத்தப்பட்டுள்ளன. ஆகையால் குறிப்பிட்ட சொல்லை எளிமையாகக் கண்டு கொள்ளலாம். இரண்டாவதாக இதில் கொடுத்திருக்கும் பொருள் வரையறைகள் பல இடங்களில் குறிப்பிடத்தக்கனவாக உள்ளன. (எ.கா.) சும்மாடு தலைச்சுமை தலையை அழுத்தாமலிருக்க தலையில் சுமைக்கு அடியில் வைக்கும் துணிச்சுருட்டை. மூன்றாவதாகச் சில இடங்களில் பொருள் தெளிவுக்காகச் சொல் இடம்பெறும் சொற்றொடரியங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. நான்காவதாகச் சில சொற்களுக்குப் படங்கள் வரையப்பட்டுள்ளன. இறுதியாகச் சில பொருள்களின் செய்முறை, பயன்பாடு முதலியன கொடுக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் இக்காலத்து வளர்ந்துள்ள அகரமுதலிக் கூறுகள். அகரமுதலிப் பின்புலம் எதுவும் இல்லாமல் இந்த அளவுக்கு அகரமுதலிக் கூறுகள் அமைய சொல் தொகை அமைந்திருப்பது பாராட்டுதற்குரியது.*

எண்ணிக்கையில் எழுத்துமொழி, பேச்சுமொழி சொற்களஞ்சியங்களுக் கிடையே வேறுபாடு இருக்கும். எந்த மொழியிலும் பேச்சுமொழிச் சொற்க ளனைத்தும் எழுத்துமொழியில் இடம் பெற்றிருக்கும் என்று சொல்ல இயலாது. நீண்ட இலக்கிய வரலாறு உள்ளமொழியில் அதன் பேச்சுமொழிச் சொற்களைக் காட்டிலும் எழுத்து மொழிச் சொற்கள் அதிகமாக இருக்கும் என எண்ணத் தோன்றும். ஆனால் உண்மை அவ்வாறு இல்லை. பொதுவாக மக்கள் பேச்சு மொழிச் சொற்களஞ்சியத்தின் அளவை குறைத்தே மதிப்பிடும் மனப்பான்மை யினராக இருப்பர். பெரும்பான்மை பேச்சுமொழியின் சொல்வளமையைக் கவனிக்காமல் இருப்பது நடைமுறை. உண்மையில் பேச்சுமொழிச் சொற்கள் உயிர்ப்போட்டத் துடன் மொழிவழக்கில் இருக்கும். சில குறிப்பிட்ட தனிநேர்வுகளில் பயன்படுத்து வனவாக விளங்கும் சொற்கள் பேச்சுமொழியில் கணிசமான அளவு இருக்கும். இச்சொற்களைப் பயன்படுத்தும் குறிப்பிட்ட சூழல்களன்றி மற்ற இடங்களில் இவற்றின் வழக்கைக் காண்பது அரிது. நல்ல இலக்கிய வளமுடைய மொழியிலும் அம்மொழியின் மொத்த சொற்களில் மூன்றில் ஒரு பங்கு சொற்களே இலக்கியத்தில் இடம் பெற்றிருக்கும் என்று சொல்கின்றனர். ஆக ஒவ்வொரு மொழியிலும் பேச்சுமொழிச் சொற்கள் அதிகமாக இருக்கும் என்பதனையும் அவை மொழிப் பயன்பாட்டில் இன்றியமையாதவை என்பதனையும் அறிந்துகொள்ள வேண்டும்.

நெல்லை வட்டார வழக்குச் சொல் தொகை என்னும் தலைப்பில் வந்துள்ள இந்நூல் பேச்சுமொழிச் சொற்களைத் தொகுக்கும் பணியின் தேவையைச் சுட்டி நிற்கிறது. உண்மையில் பேச்சுமொழிச் சொற்களைத் தொகுப்பது எளிய பணியன்று. இக்காலத்தில் முன்னேற்றம் என்ற போர்வையில் சொற்கள் பல வேகமாக வழக்கிழந்து வருவதை அறிஞர் பலர் குறிப்பிட்டுள்ளனர். இந்நிலையில் திரு.வெள் உவன் மேற்கொண்ட முயற்சி கடுமையானது என்பது சொல்லாமல் விளங்கும்.

இந்நூலில் இதுவரை ஏடேறாத சொற்கள் பல இடம்பெற்றுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (எ.கா.) புற அடை = பலகணி கதவுக்கு உட்புறமாகப் போடும் மரத்தால் செய்யப்படும் தாழ். இந்நூலின் தலைப்புக்கு ஏற்ப பல சொற்களுக்கு நெல்லை வட்டார வடிவங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. (எ.கா.) நண்ணி = நன்றி. வட்டார வழக்குச்சொற்களில் சில ஒரு பொருள் பன்மொழிகளாய் வரும். இக்கூறும் இந்த சொற்றொகுப்பில் இடம்பெற்றுள்ளது.(எ.கா.) துள்ளாட்டம் = கொண்டாட்டம். ஒரு மொழியின் முழுச் சொல்வளம் அதன் எழுத்துமொழிச் சொற்கள், பேச்சுமொழிச் சொற்கள் ஆகிய இரண்டையும் உள்ளடக்கியது. பேச்சுமொழிச் சொற்கள் பெரும்பான்மை வட்டாரச் சொற்களாகும். அவ்வகையில் திரு.வெள்உவனின் இந்த சொற்றொகுப்பு பேச்சுமொழிச் சொற்கள் பலவற்றிற்கு நிலைப்புத்தன்மையை கொடுத்துள்ளது.

இந்நூலின் அட்டைக்கட்டும் அச்சும் நேர்த்தியாக அமைந்துள்ளன. அச்சுப் பிழை இல்லை. மொத்தத்தில் தமிழ் மொழிவளர்ச்சிக்கு இது ஒரு புது வரவு

.– முனைவர் இரா.கு.ஆல்துரை –



## வழக்குரைஞர் பாவேந்தன் இல்லத் திருமணம்

நெடுநாளையத் தென்மொழி அன்பரும், தமிழ் உரிமைக்கூட்டமைப்பின் செயலரும், தமிழ்த்தேச மக்கள் கட்சியின் செயலரும் வழக்குரைஞருமான கோ.பாவேந்தன் – சாந்தி அவர்களின் மூத்த புதல்வன் சா.பா.பாரிக்கும், கோபி கி.நடராசன் – சாரதா இணையரின் மகள் சா.ந.சிந்துவர்சாவிற்கும் தி.பி.2044 மேழம் 8 (21.04.2013) அன்று ஈரோடை மாவட்டம் கோபியில் பேரா.ப.அருளியார் தலைமையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. திருவாளர்கள் பாவலர் காசி ஆனந்தன், பெ.மணியரசன், கி.த.பச்சையப்பனார், புதுக்கோட்டை இரா.பாவாணன், இறைபொற்கொடி, மா.பூங்குன்றன், தமிழ்நேயன், வழக்குரைஞர்கள் இரா.சங்கரசுப்பு, ப.பா.மோகன், பா.புகழேந்தி ஆகியோர் வாழ்த்துரையாற்ற திருமணம் நன்கு நடைபெற்றது.

மணமக்கள் நீடுழி வாழத் தென்மொழி தன் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

## பாவலர் பரணன் இல்லத்திருமணம்

பாவலர் பரணன் அவர்கள் தம் இரண்டாம் மகனின் திருமண ஏற்பாடுகளை செய்திருந்த நிலையில் அதற்குப் பத்து நாட்களுக்கு முன் திடீரென உடல் நலக்குறைவால் மறைந்துவிட்ட பாவலர் பரணன் அவர்களின் படத்திறப்பும் அவர் குறித்தபடியே இளையமகனுக்குத் திருமணமும் தமிழறிஞர்கள், தமிழன்பர்கள் குவிந்தபடி சிறப்பாக நடந்தேறியது.

பாவலர் பரணன் – ப.ஐந்தருவி அவர்களின் இளையமகன் தமிழ்ப்பரிதிக்கும் தஞ்சை வி.பஞ்சாபகேசன் – இராசேசுவரி மகள் ப.கவிதாவிற்கும் விடை 1 (15.05.2013) அன்று திருச்சி



வேங்கூரில் பேரா.முனைவர்.கு.திருமாறன் தலைமையில் செந்தமிழ் அந்தணர் இரா.இளங்குமரனார் நிகழ்த்தித்தர, திருமணம் நன்கு நடந்தேறியது. திருமணம் தென்மொழி மா.பூங்குன்றன், புலவர் க.முருகேசன் முன்னிலையில் பாவலர் தா.இராசா இரகுநாதன் தொகுப்புரை வழங்க தோழர் பெ.மணியரசன், சொல்லாய்வறிஞர் அருளியார், உணர்ச்சிப் பாவலர் காசி ஆனந்தன், இறை.பொற்கொடி, 'தழல்' தேன்மொழி, பாவலர்கள் கடவூர் மணிமாறன், எழில்வாணன், நாவை.சிவம் ஆகியோர் வாழ்த்துரையாற்ற தமிழகமெங்குமுள்ள பாவலர் பரணனின் நெஞ்சந்தொட்ட தமிழறிஞர்கள் அனைவரும் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தி திருமணத்தைச் சிறப்பித்தனர். மணமக்கள் நீடுழி வாழத் தென்மொழி தன் வாழ்த்துதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

## கனிச்சாறு நூல் அறிமுக வெளியீட்டு விழாக்கள்

பாவலரேறு ஐயா அவர்களின் 80ஆம் ஆண்டு விழாவும் பாடல் தொகுதியான கனிச்சாறு 8 பாடல் தொகுதி நூல்கள் வெளியீட்டு விழாவும் சென்னையில் நடந்தபோது தமிழகத்தில் உள்ள தென்மொழி அன்பர்கள் அனைவரும் ஒரே நேரத்தில் வர இயலாத நிலையில் அதன் அறிமுக வெளியீட்டு விழாவைப் பல ஊர்களிலும் நடத்த எண்ணினோம். அதன்படி அதைப் பொறுப்பேற்று சில அமைப்புகளுடன் இணைந்தும் தென்மொழி அவற்றை நடத்த முனைந்தது. அதன்படி கனிச்சாறு அறிமுக வெளியீட்டு விழா சில ஊர்களில் நடந்தேறின.

### கோபிப்பாளையம்

கோபி புலவர் மா.அரசு நினைவு அறக்கட்டளை, பாவேந்தர் பாசறை, பாவேந்தர் நினைவு நாளில் கனிச்சாறு நூல் அறிமுக வெளியீட்டு விழாவை தி.பி.2044 மேழம் 08 (21.04.2013) அன்று நடத்தியது.

பாவேந்தர் பைந்தமிழ்த் தொண்டர் க.கனகராசன் தலைமையில், க.பொன்னுசாமி முன்னிலையில், தென்மொழி நிலா வேங்கடவன் வரவேற்புரையாற்ற கனிச்சாறு நூலைப் பற்றியும் பாவலரேறு அவர்களைப் பற்றியும் பேரா.அரங்கசாமி, பாவலர் காசி ஆனந்தன், அருளியார், தென்மொழி தமிழப்பன், இறைபொற்கொடி, மா.பூங்குன்றன் ஆகியோர் வெளியீட்டுரை ஆற்றினர். முன் வெளியீட்டுத் திட்டத்தில் நூல்களைப் பதிவு செய்தவர்களுக்கு தொகுதிகள் வழங்கப்பெற்றன. இவ்விழாவினைச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்த ஏற்பாட்டாளரும் புலவர் மா.அரசு அவர்களின் மகனுமான அ.தமிழரசு அனைவர்க்கும் நன்றி கூறினார்.



## மதுரை

மதுரை, தமிழ்ப் காப்புக் கழகம் சார்பில் பாவலர் அரசுமணி அவர்கள் மதுரையில் கனிச்சாறு வெளியீட்டு விழாவைச் சிறப்பாக நடத்தினார்கள். தி.பி.2044 மேழம் 15 (28.04.2013) அன்று மதுரை மேலமாசி வீதியில் உற்பத்தி திறன் குழுக்கட்டடத்தில் மாலை 5 மணியளவில் விழா நடைபெற்றது. திருவாளர்கள் பொறிஞர் அகமுடைநம்பி, பொற்கை பாண்டியன், வழக்கறிஞர் அகவன், க.பிச்சை, துரை பரமசிவம், கென்னடி, தமிழ் மகன் முன்னிலையில் க.வெ.நெடுஞ்சேரலாதன் வரவேற்புரையாற்ற முனைவர் அருகோ, வழக்கறிஞர் குப்பன், வெளியீட்டு எழுச்சியுரையாற்றினர். தேமதுரத்தமிழோசை தமிழாலயன், மாலதி பொற்கைப் பாண்டியன், திரு.கென்னடி, பொறியாளர் இளங்கோவன் ஆகியோர் பலரும் நூலைப் பெற்றுக்கொண்டனர். தமிழியம் இதழாசிரியர் பொன்மாறன், பாவலர் அரசு ஆகியோர் நிகழ்ச்சியைச் சிறப்பாக அமைத்திருந்தனர்.



## கோவை

தமிழ்த் தேச மக்கள் கட்சியும், தென்மொழியும் இணைந்து கோவையில் பாவலரேறு 80ஆம் ஆண்டு விழாவையும் கனிச்சாறு நூல் அறிமுக வெளியீட்டு விழாவையும் நடத்தியது. தி.பி.2044 மேழம் 27 (10.05.2013) அன்று கோவை அண்ணாமலையார் அரங்கில் பேரா.கனல் மைந்தன் தலைமையில் சிறப்பு அழைப்பாளராக எழுத்தாளர் நாஞ்சில் நாடன் அழைக்கப்பெற்று விழா சிறப்பாக நடைந்தேறியது.




திருவாளர்கள் புலவர் ஆதி, பாவலர் இரணியன், தமிழ்த்தேச மக்கள் கட்சித் தலைவர் தமிழ்நேயன், பேரா.மு.நா.ப.தமிழ்வாணன், வழக்குரைஞர்கள் சி.முருகேசன், செ.இளங்கோவன் ஆகியோர் நூல் அறிமுக உரையாற்றிட தென்மொழி மா.பூங்குன்றன் வெளியீட்டு நிறைவுரையாற்றினார்.



கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;'' எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

மொழி, இன, நாடு எனும்
மூவரக் கொள்கையை முனைப்புடன் முழங்கிட...

அறிவியல் செய்திகள், அறிஞர்கள் ஆய்வுகள்,
இளைஞர்கள் எழுச்சிகள், சிறுவர் மலர்ச்சிகள்
– என பல்துறைப் படைப்புகளோடும்,
அதிக பக்கங்களோடு அழகிய வடிவமைப்பிலும்,
புதிய பொலிவுடன் புதிய வலிவுடன்
வெளிவரவிருக்கிறது

# தென்மொழி

“தென்மொழியை, கண்ணொளியை, மூச்சுயிர்ப்பைச் சாகும்வரை
தேர்ந்தஉயிர்த் தொண்டெனவே ஆற்றிவருவேன் - வாழ்வு
தீர்ந்துவிடின் வேற்றுடலம் மாற்றி வருவேன்!”

– என்ற பாவலரேறு அவர்களின்
மொழி, இன, நாடு எனும்
முனைப்பு வேட்கைக் களமான
தென்மொழியைப் பயிலவும் பரப்பவும்
முழுமையாய்ப் பணியாற்றுவோம் !

முழு விளக்கங்களும் அடுத்த இதழில்

**தென்மொழி ஆசிரியர்க் குழுவினர்.**

# நூல்கள் வரப்பெற்றோம் !




நூல்பெயர் : **தமிழரின் எழுத்தறிவு**
(நூல் நிறை உள்ளே)
ஆசிரியர் : நடன.காசிநாதன்
விலை : உருபா. 40.00
கிடைக்குமிடம் : மணிவாசகர் நூலகம்
என்.31, சிங்கர் தெரு, பாரிமுனை
சென்னை – 600 108



நூல்பெயர் : **நெல்லை வட்டார வழக்குச் சொல்தொகை** (நூல் நிறை உள்ளே)
ஆசிரியர் : வெள் உவன்
விலை : உருபா. 80.00
கிடைக்குமிடம் : தமிழினி
25ஏ, தரைத்தளம்
சுபென்சர் பிளாசா முதல் பகுதி
769, அண்ணா சாலை, சென்னை – 600 002



நூல்பெயர் : **'அதோ அந்தப் பறவைபோல'**
(பறவையியல் ஓர் அறிமுகம்)
ஆசிரியர் : ச.முகமது அலி
விலை : உருபா. 125.00
கிடைக்குமிடம் : தடாகம்
என்.12 / 293, இராயப்பேட்டை நெடுஞ்சாலை
இராயப்பேட்டை
சென்னை – 600 014



நூல்பெயர் : **நெருப்புக் குழியில் குருவி**
(இயற்கைப் பாதுகாப்பில் இலக்கிய அரசியல் மீதாக திறனாய்வு)
ஆசிரியர் : ச.முகமது அலி
விலை : உருபா. 90.00
கிடைக்குமிடம் : அங்குசம்
என்.39 / 15, எழுத்துக்காரன் தெரு
காலடிப்பேட்டை
திருவொற்றியூர்
சென்னை – 600 019

Printed, Published and Owned by M.Poongundran and Printed at J.M.Process,22/44 Subhedar Hussain Street, Border Thottam, Rayapettai,Chennai-600014 and Published at 24 Telephone Qtrs. IInd Main Road, C I T Nagar, Chennai 35. Editor: M.Poongundran